SAPTHAGIRI (TAMIL)
SPIRITUAL ILLUSTRATED MONTHLY
Volume:2, Issue:3, Pages:56
October-2022, Price Rs.20/-

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# ஸப்தகிரி

சமய மாத இதழ்

அக்டோபர் 2022,

விலை ரூ.20/-



கருட வாகனத்தில்
திருமலையப்ப ஸ்வாமி
01-10-2022, சனிக்கிழமை

**16-08-2022 முதல் 20-08-2022 வரை ஆந்திர மாநிலம் எஸ்.பி.எஸ்.ஆர். நெல்லூர் மாவட்டத்தில் உள்ள ஏ.சி. சுப்பாரெட்டி அரங்கில் மிகவும் வைபவமாக நடைபெற்ற ஸ்ரீவேங்கடேஸ்வர வைபவோத்ஸவத் திருக்காட்சிகள். இந்நிகழ்ச்சியில் தி.தி.தே. பொறுப்பாண்மைக்குழுத் தலைவர் திரு. ஒய்.வி. சுப்பாரெட்டி தம்பதியினர், நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் உயர் அதிகாரிகள் பங்குகொண்டனர்**













*குலக்ஷயே ப்ரணச்யந்தி*
*குலத$_4$ர்மா: ஸநாதநா: ।*
*த$_4$ர்மே நஷ்டே குலம் க்ருத்ஸ்நம்*
*அத$_4$ர்மோऽபி$_4$ப$_4$வத்யுத ॥*

**குலநாசத்தினால் தொன்று தொட்டு வருகின்ற குலதர்மங்கள் அழிந்து விடுகின்றன. தர்மம் அழிந்த பிறகு குலம் முழுவதிலும் அதர்மமும் வெகுவாகப் பரவுகிறது.**

*– ஸ்ரீமத் பகவத் கீதை 1–40*



*ஸ்ரீமந் க்ருபாஜலநிதே க்ருதஸர்வலோக*
*ஸர்வஜ்ஞ சக்த நதவத்ஸல ஸர்வசேஷிந் ।*
*ஸ்வாமிந் ஸுசீல ஸுலபாச்ரித பாரிஜாத*
*ஸ்ரீவேங்கடேச சரணௌ சரணம் ப்ரபத்யே ॥*

**திருமகளைப் பிரியாதவனே! கருணைக் கடலே! புவனமெல்லாம் படைத்தவனே! அனைத்தும் அறிந்தவனே! ஆற்றல் மிக்கவனே! போற்றுவோர் உள்ளத்தில் அன்பு கொண்டவனே! பக்தர்களுக்கு அன்போடு குற்றேவல் புரிபவனே! தலைவனே! தாழ்ந்தாரோடும் இரண்டறக் கலப்பவனே! அடைவதற்கு எளியவனே! அடைந்தவதற்கு அனைத்தும் அளிக்கும் பாரிஜாத மலரைப் போன்றவனே! திருவேங்கடமுடையானே! உன் திருவடிகளைத் தஞ்சம் என்று அடைகிறேன்.**

*– ஸ்ரீவேங்கடேஸ்வர பிரபத்தி*

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

ஸப்தகிரி இதழுக்கு தாங்கள் அளித்து வரும் ஆதரவு தன்னிகரற்றது!
தி.தி.தேவஸ்தானத்திற்கும் வாசகர்களுக்குமிடையே ஒரு பாலமான"ஸப்த வர்ண"
சமய மாத இதழ் "ஸப்தகிரி"யின் விலையில் மாற்றம்!!

உங்கள் இல்லங்களுக்கே அலர்மேல் மங்கை உறை மார்பன்
மாதாமாதம் எழுந்தருளும் அனுபூதியைப் பெறுங்கள்

ஸப்தகிரி சமய மாத இதழுக்கு சந்தா செலுத்துங்கள்...



திருமலையப்பனின் அக்ஷர பிரசாதமான "ஸப்தகிரி"யை திங்கள்தோறும் பெற்றிடுங்கள்



# ஸப்தகிரி

## சமய மாத இதழ்

(தெலுங்கு, தமிழ், கன்னடம், ஹிந்தி, ஆங்கிலம், சமஸ்கிருதம்)



.....சந்தா விவரங்கள்.....

தனிப்பிரதி : ரூ.20/-
வருடச் சந்தா: ரூ.240/-
ஆயுள் சந்தா(12 வருடங்கள்) : ரூ.2,400/-
அயல்நாட்டு வருடச்சந்தா : ரூ.1,030/-

இவ்விலைமாற்றம் செப்டம்பர் 2022 முதல் நடைமுறைக்கு வருகின்றது.
இவ்விலை மாற்றம் புதிதாக செலுத்தும் சந்தாதாரர்களுக்கு மட்டுமே பொருந்தும்.

விவரங்களுக்கு :

பிரதான ஆசிரியர், ஸப்தகிரி, தி.தி.தே. அச்சக வளாகம், கே.டி. சாலை, தி.தி.தே. திருப்பதி - 517 507.
தொலைபேசி எண்கள் : 0877-2264363, 2264543

வேங்கடமே விண்ணோர் தொழுவதுவும் மெய்ம்மையால்
வேங்கடமே மெய்வினைநோய் தீர்ப்பதுவும்



# ஸப்தகிரி

## சமய மாத இதழ்



**அக்டோபர் 2022**


மலர் 02 இதழ் 03



சிறப்பு ஆசிரியர் :
**திரு. A.V. தர்மா ரெட்டி,** ஐ.டி.இ.எஸ்.,
செயலாட்சித் தலைவர்(F.A.C.), தி.தி.தே.
வெளியீட்டாளர்-பிரதான ஆசிரியர் :
Dr. K. **ராதாரமணா,** எம்.ஏ., எம்.பில்., பி.எச்டி.,
ஆசிரியர் :
Dr. V.G.**சொக்கலிங்கம்,** எம்.ஏ., பி.எச்டி.,
அச்சிடுபவர் :
**திரு. பி.ராமராஜு,** எம்.ஏ.,
சிறப்பு அலுவலர்
தி.தி.தேவஸ்தான அச்சகம், திருப்பதி.
டி.டி.பி.
பிரதான ஆசிரியர் அலுவலகம்,
தி.தி.தே. திருப்பதி.
புகைப்படங்கள் :
**திரு.** P.N. **சேகர்**
**திரு.** B. **வெங்கடரமணா**



**பிரதிகளுக்கு:**
THE CHIEF EDITOR,
"Sapthagiri", T.T.D., Tirupati-517 507.
**0877- 2264543, 2264359**
**ஆசிரியர் : 2264360**



நீங்கள் ஸப்தகிரி இதழை
**www.tirumala.org**யில் பார்த்து,
படித்து மகிழலாம். ஆலோசனைகள்/
கருத்துக்கள்/புகார்களுக்கு
**sapthagiri.helpdesk@tirumala.org**



| | |
|---|---|
| தனிப்பிரதி | ரூ.20/- |
| வருடச்சந்தா | ரூ.240/- |
| ஆயுள் சந்தா (12 வருடங்கள்) | ரூ.2,400/- |
| அயல்நாட்டு வருடச்சந்தா | ரூ.1,030/- |



இதழில் வெளியாகும் கட்டுரைகளுக்கும், கருத்துகளுக்கும் அவ்வவ்வாசிரியப் பெருமக்களே பொறுப்பாவர் -பிரதான ஆசிரியர்


## உள்ளுறை

பக்கம்


அன்பு, பக்தி, அருள் தரும் பிரம்மோத்ஸவம் 7
-திருமதி ராதா ராமநாதன், திருப்பதி.

திங்கள் தோறும் ஒரு திருவேங்கடப் பாசுரம்: 10
திருமலை திருத்தலம் உலகுக்கு திலகம்
- பேராசிரியர் எஸ். கோகுலாச்சாரி, புவனகிரி.

வராக கிருஷ்ண அவதாரங்களும் தீபாவளியும் 14
- டாக்டர் ஜி.கௌசல்ய விஜயன், வேலூர்.

ஸ்ரீராமனின் திருக்கல்யாண குணங்கள் : அநஸூயகன் 17
- ஸ்ரீ. உ.வே. வேளுக்குடி கிருஷ்ணன் ஸ்வாமி, சென்னை.

பரமனின் அருளை அடைந்திட வழி ஸ்ரீவாரி சேவை 18
- முனைவர் பா.காயத்ரி, சென்னை.

துலா ஸ்நானம் - டாக்டர் த.வெங்கடேஸ்வரா, அம்பத்தூர். 24

திருவேங்கடவனின் சீரிய அருள் 31
- திருமதி தி.கமலி கஜேந்திரன், ஆவடி.

முருகப்பெருமான் வேல் வாங்கிய திருத்தலம் 33
- நெய்வாசல் நெடுஞ்செழியன், சிதம்பரம்.

108 திவ்வியதேச வைபவம் – திருவாட்டாறு 36
- உருப்பட்டூர் சௌந்தரராஜன், சென்னை.

அப்பிள்ளை அருளிய ஆழ்வார் ஆசார்யர்கள் வாழித் திருநாமமும் உரையும்
- ஸ்ரீ உ.வே. டாக்டர். மாடபூசி வரதராஜன் ஸ்வாமி, சென்னை. 40

அலசுவோம் அறிவோம் ஆதிகாவிய நாயகர்களை: 43
தொண்டனுக்குத்தொண்டு செய்த சத்ருக்னன்
- திரு. எஸ்.ஸ்ரீதுரை, காஞ்சிபுரம்.

ராசிப்பலன்கள் : அக்டோபர் 2022 47
- டாக்டர் எம்.வி. நரநாராயணன்,சேலம்.

நீதிக்கதைகள் : தான் என்கிற அகந்தை 48
- திரு.எம்.அசோக்ராஜா திருச்சி.

சித்திரக்கதை : விஜயதசமியில் விஜயன் 52


### அட்டைப்பட விளக்கம்

முன்னட்டை : கருட வாகனத்தில் திருமலையப்ப ஸ்வாமி, திருமலை.
பின்னட்டை : சக்கர ஸ்நானம், திருமலை.

# தீப ஒளித் திருநாள்

நம் சனாதன தர்மத்தில் ஒவ்வொரு விழாக்களுக்கும் ஒரு தத்துவமும், விளக்கமும் உண்டு. மேலும், நம் சனாதன தர்மத்தில் பல விழாக்கள் கொண்டாடப்பட்டு வருகின்றன. அவ்விழாக்களில் உலகம் முழுவதும் உள்ள இந்துக்களால் வேற்றுமையின்றி அனைவராலும் கொண்டாடப்படும் பண்டிகை தீபாவளி என்றால் அது மிகையாகாது. இத்தீபாவளி திருநாளுக்கு காரணமாக சில கதைகளைக் கூறுவதுண்டு.

ஸ்ரீகிருஷ்ணபரமாத்மா அதிகாலை நேரத்தில் நரகாசுரனை வதம் செய்தார் அந்நாளே தீபாவளி ஆயிற்று. நரகாசுரன் இறப்பதற்கு முன் இறைவனிடம் என்னால் கொடுமைப்படுத்தப்பட்ட மக்கள் இருள் நீங்கி ஒளி பிறக்கும் இந்நேரத்தை கொண்டாட வேண்டும் என்று வரம் கேட்டுக் கொண்டானாம். இங்கு நரகாசுரன் அழிந்தான் என்று கூறுவதை விட எம்பெருமானின் இன்னருளால் ஆணவமும், அகங்காரமும் அழியப் பெற்றது என்பதே சாலப் பொருந்தும். ஆணவமும், அகங்காரமும் அழிந்தால் இறைவனை அடையலாம் எனும் தத்துவம் இங்கே உணர முடிகிறது.

பவிஷ்ய புராணம் தீபாவளி அன்று மாலையில் வீட்டிற்கு வெளியே தீபங்கள் ஏற்றினால் யம பயம் இருக்காது என்று கூறுகின்றது. விஷ்ணு புராணத்தில் தீபாவளி அன்று விடியற்பொழுதில் நீராடி மகாலட்சுமியைத் துதித்து தீபங்கள் ஏற்றி வீட்டில் பல இடங்களில் வைத்தால், அந்த ஒளி படும் இடங்களில் எல்லாம் திருமகள் வந்து குடி புகுவாள் என்று கூறப்பட்டுள்ளது.

இறையருளைக் காண பொய்கையாழ்வார் உலகை அகலாகவும், கடலை நெய்யாகவும், சூரியனைச் சுடராகவும் கொண்டு விளக்கேற்றுகிறார். பூதத்தாழ்வார் அன்பை அகல் விளக்காகவும், இறை ஆர்வத்தை நெய்யாகவும், உள்ளம் உருகும் இன்பநிலையை திரியாகவும் கொண்டு மெய்யுணர்வு எனும் அறிவுச் சுடரை விளக்காக ஏற்றுகின்றார். முதல் இரு ஆழ்வார்கள் ஏற்றிய தீப ஒளியில் பேயாழ்வார் செல்வங்களுக்கெல்லாம் அதிபதியான திருமகளைக் கண்டதாக *"திருக்கண்டேன் பொன்மேனிக் கண்டேன் அருக்கன் அணி நிறமும் கண்டேன்"* என்று பாசுரமிடுகிறார்.


பிரகாசம் மிக்க திருவடிகளை உடைய பரமபதத்தில் விளங்குகின்ற ஜோதிமயமான வடிவத்தை இங்கே நன்கு சேவிக்கப்பட்டேன் என்று இறைவன் ஜோதி வடிவினன் என்பதை *"ஊன் திகழும் நேமியொளித்திகழும் சேவடியான் வான் திகழும் சோதி வடிவு"* என்கிறார் பூதத்தாழ்வார். அறியாமை மிக்கு விளங்குகின்ற இந்த நிலவுலகில் மீண்டும் மனிதனாகப் பிறப்பதற்கு எனக்கு உடன்பாடில்லை என்பதனை நம்மாழ்வாரும் *"இருள் தருமாஞாலத்தில் இனிப்பிறவி யான் வேண்டேன்"* என்கிறார்.

"இருள் தருகின்ற இவ்வுலகில் பேரானந்தமாக வாழ விரும்புவீர்களேயானால் பூர்வாசார்யர்களுடைய ஞான அனுஷ்டானங்களை எடுத்துச் சொல்கின்ற மகான்களை சரணடையுங்கள்" என்று உபதேசிக்கின்றார் மணவாள மாமுனிகள். தீபாவளி கொண்டாடுவதன் பின்னணியில் பலவித காரணங்கள் இருந்தாலும் அடிப்படையான காரணம் அறியாமை எனும் இருள் அகன்று ஞான ஒளி பெற வேண்டும் என்பதேயாகும். வெறுமனே உடலளவில் நீராடுவதோடு மட்டுமின்றி அறியாமை, ஆணவம், அகந்தை இவற்றைப் போக்க மனதளவிலும் இறை நாமங்களால் குள்ளக்குளிர நீராடினால் தான் அங்கே "ஞான ஒளி பட்டொளி" வீசும்.

நாமும் சான்றோர்களின் நல் உபதேசங்களைக் கேட்டறிந்து அறியாமை, ஆணவம், அகந்தை நீங்கி இகபர உலகில் இன்புற்று வாழ்வோம்.

# அன்பு, பக்தி, அருள் தரும்
# பிரம்மோத்ஸவம்

திருமலையில் ஒவ்வோர் ஆண்டும் நடைபெறும் பிரம்மோத்ஸவம் அன்பு, பக்தி, அருள் என்ற மூன்றும் இணைவதால் நடக்கும் ஓர் அற்புதமான நிகழ்வு எனலாம். திருமால் தானே விரும்பி, திருமலையின் புனிதத் தன்மையைக் கருதி வைகுண்டம் விடுத்து திருமலைக்கு வந்து விட்டதால் பிரம்மாதி தேவர்களும் இங்கு வந்து பூஜிக்கின்றனர். ஆண்டுதோறும் நடைபெறும் பிரம்மோத்ஸவத்தை பிரம்மாவே முன்னின்று நடத்தி வைப்பதால் ஊர்வலத்தில் "பிரம்ம ரதம்" முன் செல்கிறது.



திருமலையில் தினசரி பூஜைகளின் போதும், பிரம்மோத்ஸவத்தின் போதும் மலர் மாலை அலங்காரங்கள், ஆபரண அலங்காரங்களுக்கு ஈடாக வேறெங்கும் உண்டா? பிரம்மோத்ஸவத்தின் போது காலை, இரவு என விதவிதமான அலங்காரத்தில், வித விதமான கோலங்களில் காட்சி தரும் அற்புதக் கோலந்தான் என்னே! இத்துணை ஆரவாரத்துடன் பிரம்மோத்ஸவம் நடத்தப்படுவது எதற்காக? அண்ட பகிரண்டங்களையும் நம் வாழ்க்கை இரதத்தையும் நியதியுடன் நடத்திச் செல்லும் இறைவனுக்கு நன்றி செலுத்தும் விதமாகத்தான் நடத்தப்படுகிறது. இறைவன் படைப்பில் அனைத்திலும் இறை சக்தியை உணர்ந்து, அவனன்றி ஓர் அணுவும் அசையாது என்ற ஊற்றெடுத்து பெருகிப் பரந்து விரிந்து அதுவே படைத்தவனின் மீது படர்ந்து பக்தியாக பரிணமிக்கிறது. அந்த பக்தியே உறுதுணையாகிறது. இலட்சக் கணக்கில் பக்தர்களும் கூடி, எந்த விதமான குறைபாடுமின்றி இறைவனை தரிசனம் செய்து கொண்டு போவது என்பது அவனருளின்றி நடக்க இயலுமா? யோசித்துப் பாருங்கள்.

துப்புரவுப் பணியாளர்களிலி ருந்து, பல்லக்கு தூக்குவோர், மலர் மாலைகள் கட்டுவோர், வண்ண வண்ண விளக்கு

- திருமதி ராதா ராமாநாதன், திருப்பதி.



களால் அலங்கரிப்போர், இறைவன் உலா வரும் வீதிகளில் வண்ண வண்ணக் கோல மிடுவோர், மலையப்பனை விதவிதமாக அலங்கரித்து முறை தவறாமல் பூஜை செய்யும் அர்ச்சகர்கள், வேதமோதும் வேத விற்பன்னர்கள், தமிழ் வேதமாகிய நாலாயிர திவ்ய பிரபந்தங்களை சாற்றுவோர், ஆங்காங்கே பக்தர்களுக்கு உணவு, குடிநீர், பால் என இடைவிடாது சிறிதும் அலுப்பின்றி வழங்கும் சேவகர்கள் என அவரவர் பணியை அவரவர் செம்மையாக நிறைவேற்றுவது எப்படி? இதைத் தவிர ஆங்காங்கே இறை புகழ் பாடும் சங்கீத மேடைகள், இந்தியாவின் பல மாநிலங்களில் இருந்தும் வந்து உற்சாகத்தோடு பங்கு கொள்ளும் வாத்திய கோஷ்டிகள், நாட்டியக் கலைஞர்கள் என எங்கும் மகிழ்ச்சி ஆரவாரத்துடன் விளங்கும் பிரம்மோத்ஸவ நிகழ்வு அவன் அருளால் தான் நடைபெறுகிறது என்பதை இப்போது நீங்களும் ஒப்புக் கொள்வீர்கள் என நினைக்கிறேன்.

இலட்சக்கணக்கான பக்தர்களை மனம் கோணாத வண்ணம் பார்த்துப் பார்த்து சேவை செய்யும் தேவஸ்தான பணியாளர்கள், வெளியில் இருந்து தன்னிச்சையாக வந்து பணிபுரியும் சேவார்த்திகள் என அனைவரையும் ஒருங்கி ணைத்து, சரியான வழியில் நடத்திக் கட்டுப்பாட்டில் வைத்து நிர்வகிக்கும் தேவஸ்தான நிர்வாக அதிகாரிகளைப் புகழ்ந்தே ஆக வேண்டும்.

தரிசனத்திற்காக வரும் பக்தர்கள் அனைவரும் ஒரே சிந்தனையுடன் பக்தி பாவனையில் ஒன்றுபட்டு மெய் மறந்து நிற்பதைச் சொல்வதா? கொட்டும் மழை யாகட்டும், குளிராகட்டும், வெயி லாகட்டும் எதுவும் எங்களை ஒன்றும் செய்யாது என, சரீரம் என ஒன்று இருப்பதையே மறந்து ஏழுமலை யானின் அழகில் மயங்கி நிற்பதைச் சொல்வதா?

பிரம்மோத்ஸவத்தின் ஒன்பது நாளும் பல்வேறு வாகனங்களில் விதவிதமான அலங்காரத்துடன் உலா வரும் திருமலையப்பனின் முகத்தில் தான் எத்தனை விதமான தோற்றங் கள். ராஜாராமனாக கம்பீரத்துடனும், ஆநிரை மேய்த்த கோவிந்தனாக எளிமையுடனும், மோகினி அலங்கா ரத்தில் ஒய்யாரத்துடனும் தோன்றும் மலையப்பனின் அழகில் மலைத்துப் போய் பக்தர்கள் ஒரு கணம் கூட கண் கொட்டாது நிற்பதில் வியப்பென்ன!

தன்னந்தனியே காடுகளுக்கு இடையில் குகையில் வாழ்ந்து வந்த யோகினி தரிகொண்ட வெங்கமாம்பா எழுதியுள்ள "முத்யால ஆரத்தி" பாடலை படித்தால் ஒரு முறை நேரில் திருமலைக் கோயிலுக்குச் சென்று மூல மூர்த்தியை மட்டுமின்றி, கோபுரங்கள், பரிவார தேவதைகள் அனைவரை யுமே தரிசித்தப் புண்ணியமும், அனுபவமும் கிடைக்கும்.

பிரம்மோத் ஸவத்தில் பணி புரியும் அனைவருக்கும் நித்ய பூஜைகளில் உதவும் அத்துணை பேருக்கும் தரிகொண்ட வெங்கமாம்பா ஆரத்தி எடுத்து

திருஷ்டியைக் கழிக்கிறார். அதை இங்கு சுருக்கமாக தெரிந்து கொள்வது பொருத்தமாக இருக்கும்.

*"ஸ்ரீவேங்கடாத்ரி வரசிகராத்ரி வாசுனகு"* எனத் தொடங்கும் பாடலது. எங்களது பாவங்களைப் போக்கும் பாஸ்கரனுக்கும் அலர்மேல் மங்கைக்கும் மங்களம் சுப மங்களம் எனத் தொடங்கி, சரணடைந்த தாசர்களுக்கு வரமளிப்பதே என் வேலை எனக் காத்திருக்கும் ஜகன்னாதனுக்கு தனமளிப்பது எனது பங்கு எனத் தயாராய் இருக்கும் மார்பில் உரை மஹா லட்சுமிக்கும் மங்களம் ஜய மங்களம். கோயிலில் உள்ள வாகனங்கள், உக்ராண அறை, அங்கு பலவிதமான நிவேதனங்களைத் தயார் செய்யும் "சீலர்கள்", அலங்காரக் குடைகள், மகர தோரணங்கள் , துவார பாலகர்கள், கோயிலின் உள் வாத்தியங்களை வாசிக்கும் வாத்திய விற்பன்னர்கள், திருக்கல்யாணம் நடைபெறும் கல்யாண வேதிகை, சக்ர ஸ்நானம், திவ்ய ஆபரணங்கள் வைத்துள்ள அறைக்கு, கோயிலில் உள்ள பரிவார தேவதைகள், திருவீதிகள், திவ்ய தீர்த்தங்கள், கோபுரம், பிராகாரங்கள், பொன்னால் ஆன கனக கோபுரத்தின் சிகரத்தில் உள்ள கலசங்களுக்கு, தர்ம சத்திரங்கள், சிருங்கார வனங்கள், நித்ய பூஜைகள், பிரம்மோத்ஸவம் இவற்றில் அயராது பணி புரியும் சேவகர்களுக்கும் மங்களம் பாடி மகிழ்கிறார் தரிகொண்ட வெங்கமாம்பா. முத்யால ஆரத்தி எடுத்த நாம் அன்னமய்யா பாடல் ஒன்றுடன் முடிப்போம்.

தேவர்களும், வனிதையர்களும், அலர்மேல் மங்கையும் வேங்கடவன் மேல் முத்துக்களைச் சொரிந்து வழிபடுகின்றனர். முத்துக்கள் நட்சத்திரங்களாகவும் அவற்றின் இடையில் இவன் சந்திரனாக ஒளி வீசுகின்றான். பெரிய பெரிய முத்துக் களைச் சொரியும்போது ஆலங்கட்டி மழை போலவும் இவன் கருமேகம் போல் இருக்கிறான். ஆங்காங்கே நின்ற முத்துக்களை அவன் பிரம்மாண்டத்தையே தாங்கி நிற்பது போல் இருக்கின்றதாம். அலர்மேல் மங்கை சொரிந்த முத்துக்கள் அப்போதே மலரக் காத்திருக்கும் சுரபுன்னை மொட்டுக்களைப் போல் உள்ளனவாம். *இட்டி நின்னு நுதியிஞ்ச எவ்வரி தரமுலய்யா"* என்ற பாடலில் உன்னைப் போற்றிப் பாடுவது யாரால் இயலும்? என்று மலைக்கிறார் மலையப்ப பக்தர் அன்னமய்யா.

பிரம்மோத்ஸவத்தை நேரில் கண்டு, அனுபவித்த பக்தர்களுக்கும், தொலைக்காட்சி மூலம் நேரலையில் கண்டு களித்த பக்தர்களுக்கும் அடுத்த ஆண்டு வரை ஆனந்த அனுபவம் தொடர்ந்து அவரவர் பணியில் ஆனந்தமாக ஈடுபடுவதற்கான மன நிறைவைத் தரும் என்பதில் ஐயமில்லை.

"வேங்கடமே விண்ணோர்க்கும் மண்ணோர்க்கும் வைப்பு"













# திருமலை திருத்தலம் உலகுக்கு திலகம்

- பேராசிரியர் எஸ்.கோகுலாச்சாரி, புவனகிரி.

## உலகுக்கு திலகம்

திருவாய்மொழி ஆறாம்பத்து பத்தாம் திருவாய்மொழியில் முதல் பாசுரம். அதி அற்புதமான பாசுரம். ஆழ்வார் இந்தத் திருவாய் மொழியில், பிராட்டியை முன்னிட்டுக் கொண்டு எம்பெருமானைச் சரணம் புகுகின்றார். திருவாய்மொழியின் உயிர்ப் பாசுரமான **“அகலகில்லேன் இறையும்”** என்ற பாசுரம் துவையார்த்தமாக இதில்தான் உள்ளது. அந்தத் திருவாய்மொழியின் முதல் பாசுரம் இது. எம்பெருமானுடைய எல்லையற்ற பெருமையையும், திருமலையின் பெருமையையும் மிக அற்புதமாக விளக்குகின்ற பாசுரம்.

முதலில் இந்தப் பாசுரத்தைப் பார்த்து விடுவோம்.

*உலகம் உண்ட பெருவாயா! உலப்பில் கீர்த்தி யம்மானே!*
*நிலவும் சுடர்சூ ழொளி மூர்த்தி! நெடியாய்! அடியே னாருயிரே!*
*திலதம் உலகுக் காய்நின்ற திருவேங்கடத் தெம்பெருமானே!*
*குலதொல் லடியேன் உனபாதம் கூடுமாறு கூறாயே.*

பிரளய காலத்தில் உலகங்களையெல்லாம் அமுது செய்த பெருவாயையுடையவனே! முடிவில்லாத புகழுடைய பெருமானே! அப்ராக்ருத தேஜோ மயமான திவ்ய விக்ரஹத்தையுடையவனே! மிகப் பெரியோனே! உன்னுடைய திருவடியை நான் கிட்டப்பெறாமல் கிலேசிப்பது பிரளயாபத் தோடொக்கும், இந்த ஆபத்தை நீ போக்கினா லல்லது பிரளயாபத்தைப் போக்கினாயென்கிற புகழ் உனக்கு நிலைநிற்கமாட்டாதென்கிற கருத்துப் பட **“உலகமுண்ட பெருமையுடையது, அந்த ஆபத் ரக்ஷக த்வம் மெய்யானால் என்னையும் ஆபத்தில் நின்று மெடுத்தருளித் திருவடிகளில் சேர்த்துக் கொள்ள வேண்டாவோ வென்றவாறு”** என்று இந்தப் பாசுரத் தின் உரை சுவையாகக் கொடுக்கப்பட்டு இருக்கிறது.

இனி வரிவரியாக இப்பாசுரத்தின் இனிமையை அனுபவிப்போம். முதலில் அவன் எழுந்தருளியுள்ள திருமலையின் சிறப்பை **“திலதம் உலகுக் காய்நின்ற திருவேங்கடத்தெம் பெருமானே!”** என்ற தொடரின் மூலம் கூறுகின்றார்.

எத்தனையோ திருத்தலங்கள் இருக்கின்ற பொழுது விண்ணுக்கும் மண்ணுக்கும் வைப்பாய் இந்தத் திருமலையைத் தேடி வந்து, ஏன் எம்பெருமான் நின்று அருள வேண்டும்?

திருமலையின் சிறப்பை பல பாசுரங்களில் பல ஆழ்வார்கள் பாடியிருக்கிறார்கள்.

**“மலை ஒன்றுமே தொழ நம் வினை ஓயுமே”** என்று நம்மாழ்வார் பாடி இருக்கிறார்.

**“மந்தி பாய் வட வேங்கட மாமலை வானவர்கள் சந்தி செய்ய நின்றான்”** என்பது திருப்பாணாழ்வார் வாக்கு.

வேங்கட மலையில் நின்று அருள்வதால் வேங்கடவன் என்று அவனுக்குப் பெயர்.

திருவேங்கடம் உலகுக்கு நெற்றித் திலகமாக விளங்குகிறதாம்.

நெற்றித் திலகம் ஒரு பெண்ணுக்கு மங்கலம் அல்லவா. நிலமகள் என்னும் பெண்ணின் திலகம் திருமலை என்பதால் உலகுக்கு மங்கலம் தரும் தலம் இது.

கம்பராமாயணத்தில் அயோத்தியை வர்ணிக்கின்ற போது நிலமகளுக்குத் திலகமாக விளங்குகிறது அயோத்தி என்பார் கம்பநாட்டாழ்வார்.

*நிலமகள் முகமோ! திலகமோ! கண்ணோ!*
*நிறை நெடு மங்கல நாணோ!*
*இலகு பூண் முலைமேல் ஆரமோ! உயிரின்*
*இருக்கையோ! திருமகட்கு இனிய*
*மலர்கொலோ! மாயோன் மார்பில் நன் மணிகள்*
*வைத்தபொற் பெட்டியோ! வானோர்*
*உலகின் மேல் உலகோ! ஊழியின் இறுதி*
*உறையுளோ! யாது என உரைப்பாம்?*

இத்தலத்தில் அருள்கின்ற எம்பெருமானை பின்வரும் பெருமைகளைக் கூறிப் போற்றுகின்றார்.

1) உலகம் உண்ட பெருவாயன்

2) உலப்பில் கீர்த்தி அம்மான்

3) நிலவும் சுடர் சூழ் ஒளி மூர்த்தி

4) நெடியான்

பெருவாயா! என்று முதலில் அவன் திருவாயின் பெருமையை ஆழ்வார் சொல்லி பூரிப்படைகிறார்.

எதற்காக அவன் உலகத்தை எல்லாம் உண்டான்?

உலகத்தைக் காப்பதற்காக உண்டான்.

கொஞ்சமும் கெடாமல் இந்த உலகத்தைக் காப்பாற்ற வேண்டுமே என்பதற்காக உண்டான்.

எப்பொழுது உண்டான்?

பிரளய காலத்திலே உண்டான்.

ஒரு பொருளை பத்திரமாக எடுத்து வைத்திருந்து மறுபடியும் அதை வெளிப்படுத்த வேண்டிய பொறுப்பு அவனுடையது அல்லவா. அதனால் அந்த பாரிப்பு அவனிடத்திலே இருந்தது. அந்தப் பாரிப்பினை இங்கே சொல்லுகின்றார்.

உண்டு என்பது ஒரு செயல் (வினை).

பெருவாயன் என்பதால், அண்ட சராசரங்களை எல்லாம் இந்த வாயின் வழியாக உள்ளே செலுத்தி, வெளியே விடுகின்றான்.

## கோவிந்த நாம சங்கீர்த்தனம்

**கிருத யுகத்தில் தியானத்தாலும், திரேதா யுகத்தில் யாகத்தாலும், துவாபர யுகத்தில் அர்ச்சனையினாலும் கிடைத்த பகவானின் அருள்... இந்தக் கலியுகத்தில் மிகவும் எளிமையான நாம சங்கீர்த்தனம் செய்தாலே பெற்று விட முடியும்" என்று ஸ்ரீமத் பாகவதத்தில் சுகப்பிரம்ம மகரிஷி பரிக்ஷீத் மன்னருக்கு விளக்கினார். "கோவிந்தா...! கோவிந்தா...! என்று இறைவன் நாமாவளியைச் சொல்லிக் கொண்டிருந்தாலே போதும், கோடி புண்ணியம் நமது கணக்கில் சேரும்!**



திருமலை எழில் மிகு மரங்கள் நிறைந்து பசுமையாய், வெண்ணிற வண்ணத்தில் புண்ணிய தீர்த்தங்களான அருவிகளின் ஓசைகள் நிறைந்து, அரிய வன உயிரினங்களின் வாழ்விடமாகத் திகழ்கிறது. அத் தகைய எழில் மிகு நிறைந்த திருமலையைப் பாது காக்கும் பொறுப்பும் நம்மிடம் உள்ளது. நாம் உபயோகித்த பொருட்களை புனிதமான திருமலையில் ஆங்காங்கே வீசி எறிவதி னால் இயற்கை வளமும், நீர் வளமும் மாசடைகின்றது. இதனால் மழைக் காலங்களில் மலைச்சரிவு போன்ற இயற்கைப் பேரிடர்கள் நிகழ்கின்றன. அடர்ந்த வனப்பகுதியான திருமலையை வாழ்விடமாகக் கொண்ட உயிரினங் களும் அழிந்து விடும் அபாயம் உள்ளது.புனிதமான இந்த சேஷாசல வனப்பகுதியை பாதுகாத்து, ஸ்வாமியை தரிசித்து நம் சந்ததியினருக்கும் அப்பெரும் பாக்கியம் அளித்திடுவோம்.




*"உண்டு, உமிழ்ந்து"* என்று இரண்டு செயல்களை ஆழ்வார்கள் ஆச்சரியமாகப் பாடுகின்றார்கள். நாரம் என்னும் உயிர்த் தொகுதிகள், அயனம் என்னும் இந்த வாயின் வழியாக, உள்ளே சென்று வெளியே வருகின்றன. அதனால் நாராயணன் என்ற பொருளுக்கு அவருடைய திருவாய் காரணமாக விளங்குகிறது. பெருவாய் என்றால் பெரிய வாய் என்றும் ஒரு பொருள். பெருமை மிக்க வாய் என்றும் ஒரு பொருள். இந்த உலகங்களைக் காத்த பெருமை உடையது அந்த வாய்.

அதனால் *"உலகம் உண்ட பெருவாயா"* என்று அழைத்தது, இந்த உலகத்தை காத்த நீ, அடியேனுடைய உயிரைக் காக்க மாட்டாயா என்று தொனிக்கும்படி பாடுகிறார்.

*"உய்ய உலகு படைத்து உண்ட மணிவயிறா,*
*ஊழிதொறு ஊழி பல ஆலின் இலையதன்மேல்*
*பைய உயோகு-துயில் கொண்ட பரம்பரனே"*

என்றும்,

*"பாலன் தனதுருவாய் ஏழுலகுண்டு*
*ஆலிலையின் - மேலன்று நீ வளர்ந்த மெய்யென்பர்"*

என்றும் எல்லா ஆழ்வார்களும் உலகம் உண்ட செயலைப் பாடியிருக்கிறார்கள். இவ்வளவு செய்தும், என்ன பெரிதாகச் செய்து விட்டோம், என்றே நெஞ்சில் குறை உள்ளவனாய் நிற்கிறான். திரௌபதிக்காக எத்தனையோ காரியங்கள் செய்தான். துரியோதனன் சபையில் அவள் பட்ட மகா பரிபவத்தைப் போக்கினான். துரியோதனாதிகளை அழித்தான். தருமபுத்திரன் தலையில் முடி சூட்டினான். அவள் கருங்குழலை முடிப்பித்தான்.

ஆனால் அவளுக்கு ஒன்றும் செய்ய முடியவில்லையே என்று *"ருணம் ப்ரவ்ருத்தமிவ மே ஹ்ருதயாத் நாபஸர்ப்பதி"* என்று குறைவாளனாய், பரமபதத்துக்கு எழுந்தருளுகிறான். இரண்டாவதாக அவனுடைய முடிவற்ற புகழையும் பெருமையையும் பேசுகிறார்.

உலப்பு என்றால் எல்லை, கரை, அழிவு, முடிவு என்று பொருள். *"அளவு மிடைந்தவ ருலப்பிலர்"* (கம்பரா. உருக்கா.23) உதவுகை. *"ஒல்கிடத் துலப்பிலாவுணர் விலார்"* (கலித் 25) *"உலப்பு இல்"* என்றால் எல்லை இல்லாத என்று பொருள். உயர்வற உயர்நலம் உடையவன் என்று முதல் பாசுரத்திலேயே அவன் எல்லையற்ற பெருமையைப் பாடித்தான் திருவாய்மொழியை ஆரம்பிக்கிறார்.

உலகம் நிறைந்த புகழானாக நிகரில் அமரர் முனிக் கணங்கள் ஏத்தும் திருவேங்கடத்தில் நிற்கிறான் என்பதை இந்த வரியில் சுட்டிக் காட்டுகின்றார்.

எம்பெருமானுடைய பெருமை எப்படிப்பட்டது என்று சொன்னால் அவரால் தண்டிக்கப்பட்டவர்களின் உறவுகளும் புகழும்படியான பெருமையை உடையவன். ஸ்ரீராமாயணத்தில் சூர்ப்பணகை, தாரை, மந்தோதரி ஆகிய மூன்று கைம் பெண்டாட்டிகளும் நிந்திக்கவேண்டிய நிலையிலும் வாயார வாழ்த்தினபடி

கண்டால் பின் என் சொல்ல வேணும்? காதும் மூக்கு மறுப்புண்டு காதூ டணர் பக்கலில் கதறிக் கொண்டு ஓடாநின்ற சூர்ப்பணகை நெஞ்சைப் பறி கொடுத்து ''தருணௌ ரூபஸம்பந்நௌ'' என்று தொடங்கி ஆச்சரியமாக வாழ்த்துகிறாள் என்பது காஞ்சி பி.ப. அண்ணங்கராச்சாரியார் ஸ்வாமிகளின் உரை.

**நிலவுஞ்சுடர் சூழொளிமூர்த்தி**

அவன் காப்பாற்றவில்லையெனினும் அவனை விட முடியாதபடி வடிவழகு இழுக்கிறதாம்! நிலவும் என்றது எப்போதுமுள்ளதென்றபடி நித்ய அழகு, அழியா அழகு.

*வெய்யோன் ஒளி தன் மேனியின்*
*விரி சோதியின் மறைய*
*பொய்யே எனும் இடையாளொடும்*
*இளையானொடும் போனான்*
*மையோ, மரகதமோ, மறி*
*கடலோ, மழை முகிலோ*
*ஐயோ, இவன் வடிவு என்பது ஓர்*
*அழியா அழகு உடையான்*

ஒரு கருமமடியாக வருவதும் பிறகு கழிந்து போவதுமன்றிக்கே என்று முள்ள, சுடர்மிக்கதான ஒளி மயமான மூர்த்தி, ரஜஸ்தமோ குணங்கள் கலசாமல் சுத்தஸத்வமயமாய் நிரவதிக தேஜோ ரூபமாய் நெய்திணுங்கினாப்போலே உள்ளும் புறம்மொக்க ஒளியே யாயிருக்கை என்பது உரையாசிரியர்கள் விளக்கம்.

நெடியாய் : தொட்ட தொட்ட துறைதோறும் தரை காண ஒண்ணாதபடி பெருகிச் செல்பவனே! ''புருஷம்மஹாந்தம்'' என்று வேதம் ஓதிற்று. அடியேன் ஆருயிரே : வடிவழகையும் திருக்குணங்களையும் காட்டிப் பிரிந்து பிழைக்க ஒண்ணாத படி என்னைப் பண்ணினவனே! என்றவாறு. "திருவேங்கடத் தெம்பெருமானே அடியேனாருயிரே!" என்று கூட்டுவது திருமலையிலே நின்று என்னுடைய அடிமையறிவித்து உன்னாலல்லது செல்லாதபடி பண்ணினவனே! என்கை. அவ்வர்த்தமே இங்கு நெடியானென்று நிலைத்தது என்று ''செடியாய வல்வினைகள் தீர்க்கும் திருமாலே நெடியானே வேங்கடவா'' என்று குலசேகராழ்வாரும் நெடியான் என்று அழைக்கிறார்.


நெடியானுக்கு நேர் எதிர் பதம் சிறியவன். பேரான்மாவாகிய பரமாத்மாவுக்கு எதிர் பதம் ஜீவாத்மா. இந்தப் பாசுரத்தில் ஜீவாத்மா, பேரான்மா வாகிய திருமலை அப்பனிடம் உய்வு பெறும் வழியை உருக்கமாகக் கேட்கிறது. அப்படிக் கேட்கும் பிரார்த்தனை ஒலிதான் இப்பாசுரத்தின் ஆன்மா (சாரமான பொருள்).



## திருமலைக்கு மலைவழி பாதைகள்

**நாட்டின் பல்வேறு பகுதியிலிருந்து வரும் பக்தர்கள் திருமலையை சென்றடைய நான்கு முக்கிய பாதைகள் உள்ளன. அவை முறையே திருப்பதியிலிருந்து திருமலைக்கு செல்பவர்களுக்கு,**

**அலிபிரியிலிருந்து ஆனந்த நிலையம் வழி, இரண்டாவது ஸ்ரீநிவாச மங்காபுரத்திலிருந்து ஸ்ரீவாரி மெட்டு அல்லது ஸ்ரீபதிவாரி மெட்டு மார்க்கம், மூன்றாவது பாக்ராபேட்டை – தேவர கொண்டா ஆரண்ய வழி, நான்காவது கடப்பா அருகில் மாமண்டூரிலிருந்து தொடங்கும் ஸ்வாமி பாதால (பாதங்கள்) வழி என்பதாகும்.**



# வராக கிருஷ்ண அவதாரங்களும் தீபாவளியும்

- டாக்டர் ஜி.கௌசல்யா விஜயன்,
வேலூர், 9944774860

உலகையும் மக்களையும் காக்கும் முழுமுதற் கடவுளான திருமால் பக்தர்களைப் பாது காக்க தீயவர்களைத் தண்டிப்பதற்காக எடுத்த அவதாரங்கள் பத்து. அவற்றுள் மூன்றாவது அவதாரம் வராக அவதாரம், ஒன்பதாவது அவதாரம் கிருஷ்ண அவதாரம். இவ்விரு அவதாரங்களில் மூன்றாவது அவதாரமான வராக அவதாரத்தில் அவருக்கு மகனாகப் பிறந்த நரகாசுரன் ஒன்பதாவது அவதாரமான கிருஷ்ண அவதாரத்தில் கிருஷ்ணன் முன்னிலையில் சத்யபாமாவால் தண்டிக்கப்பட்டான். அந்த நாளே தீபாவளித் திருநாளாகும்.

### வராக அவதார நோக்கம்

பாற்கடலில் திருமாலின் வாயிற்காவலர்களாக இருந்தவர்கள் ஜெய, விஜயர்கள். இவர்கள் பெற்ற சாபத்தால் பூமியில் பிறக்க நேர்ந்தது. திருமாலின் பகைவர்களாகப் பிறந்தால் மூன்று பிறவிகளில் சாபவிமோசனம் கிட்டும் என்றும் பக்தர்களாகப் பிறந்தால் பல பிறவிகள் பிறக்க வேண்டும் என்பதும் நிபந்தனை. பல காலங்கள் திருமாலைவிட்டுப் பிரிய மனமில்லாத ஜெய விஜயர்கள் திருமாலின் பகைவர்களாகவே பூமியில் பிறந்து அவரால் தண்டிக்கப்பட்டு மீண்டும் பாற்கடலில்



வாயிற்காவலர்களாக வர விரும்பினார்கள். அதில் முதற்பிறவி இரண்யன், இரண்யாட்சகன், இரண்டாவது பிறவி இராவணன், கும்பகர்ணன், மூன்றாவது பிறவி கம்சன், சிசுபாலன்.

கொடுமைகள் பல செய்து வந்த இரண்யாட்சகன் கொடுமையின் உச்சமாகப் "பூமியைப் பாய் போலச் சுருட்டி எடுத்துச் சென்று கடலுக்கு அடியில் ஒளித்து வைத்தான். "தேவர்கள்" பிரம்ம தேவனிடம் முறையிட்டு வருந்தினார்கள். பிரம்மன் திருமாலைத் தியானம் செய்தார். திருமால் வராக மூர்த்தியாக அவதாரம் செய் தார். பிரளய கால கடலுக்கடியில் மறைந்திருந்த இரண்யாட்சகனைக் கொன்று பூமியைக் கடலுக்கு வெளியே கொண்டு வந்தார்.

### கிருஷ்ணாவதாரம்

அதர்மத்தை அழித்து தர்மத்தை நிலை நாட்டுவதற்காக திருமால் எடுத்த அவதாரம் கிருஷ்ண அவதாரம். இது தசாவ தாரத்தில் ஒன்பதாவது அவதாரம். நான்கு யுகங்கள். 1) கிருத யுகம், 2) திரேதாயுகம், 3) துவாபர யுகம், 4) கலியுகம் என்பன. இவற்றில் மூன்றாவது யுகமான துவாபர யுகத்தில் கிருஷ்ண அவதாரம் நிகழ்ந்தது.

இந்த அவ தாரத்தின் பொழுது தான் ஜெய விஜயர்களின் மூன்றாது பிறவி யான

“கம்சன்”, “சிசுபாலன்” ஆகியோரைத் தண்டித்து அவர்களைச் சாபத்திலிருந்து விடுதலை செய்தார். “சத்திராஜித்தின்” மகள் “சத்யபாமா” என்றும் முதுமை அடையாத வரத்தை அதிதியிடம் பெற்றவள். சத்யபாமாவுக்காகத்தான் பாரிஜாதமலர் தேவ லோகத்தில் இருந்து மதுராவுக்கு வந்தது.

### நரகாசுரன் பிறப்பும் வரமும்

வராக அவதாரத்தின்போது கடலுக்கடியில் மறைத்து வைத்த பூமாதேவியைத் தன் கொம்புகளால் தாங்கி எடுத்துக்கொண்டு கடலுக்கு மேல் வந்தார் வராக மூர்த்தி. அப்போது பூமாதேவியுடன் ஏற்பட்ட தொடு உணர்வால் பிறந்தவன் நரகாசுரன். அவன் பிறந்தவுடன் பாசத்துடன் அக்குழந்தையைத் தொட்டுத் தூக்கினாள் பூமாதேவி. அக்குழந்தை தேவர்களைப் போல இலேசாக இல்லாமல் கனமாக இருந்ததால் அக்குழந்தை அசுர குலத்தைச் சார்ந்ததாக உள்ளது என்பதை உணர்ந்து கொண்டாள். அதன் காரணமாக அவனுக்கு நரகாசுரன் என்று பெயர் ஏற்பட்டது.

வராக அவதாரத்தில் பிறந்த நரகாசுரன் பிராக்சோதிடபுரி என்ற நாட்டை ஆண்டு வந்தான். அவன் திருமாலின் நான்காவது அவதாரமான நரசிம்ம, ஐந்தாவது அவதாரமான வாமன, ஆறாவது அவதாரமான பரசுராமன், ஏழாவது அவதாரமான இராமன், எட்டாவது அவதாரமான பலராமன், ஒன்பதாவது அவதாரமான கிருஷ்ணன் ஆகிய அவதார காலங்களில் பிராக்சோதிடபுரியை மிக நீண்ட காலம் ஆட்சி செய்தான்.

அவனது ஆட்சி காலத்தில் மக்கள் பல்வேறு கொடுமைகளுக்கு



ஆளானார்கள். ஆயிரம் பெண்களைப் பலியிட வேண்டும் என்ற நோக்கத்துடன் தொள்ளாயிரத்துத் தொண்ணூற்று ஒன்பது பெண்களைச் சிறைப் படுத்தியிருந்தான். அவன், “தன் தாயைத் தவிர வேறு யாராலும் தனக்கு மரணம் ஏற்படக் கூடாது என்ற வரமும் பெற்றிருந்தான்”. சிறையிலிருந்த பெண்கள் கிருஷ்ணனிடம் தங்கள் துன்பங்களைச் சொல்லி பிரார்த்தனை செய்தனர்.

### தீபாவளிப் பண்டிகை

பெண்களின் துயர் துடைப்பதற்காக ஐப்பசி மாதம் தேய்பிறை திரயோதசியில் நரகாசுரனைத் தண்டிக்க எண்ணினார் கிருஷ்ணர். அவன் தாயைத் தவிர யாராலும் தனக்கு மரணம் ஏற்படக் கூடாது என்று வரம் வாங்கியிருப்பதையும் எண்ணிப் பார்த்தார். நரகாசுரனை அழிக்கச் சென்ற போது சத்யபாமாவும் உடன் சென்றாள்.

கருட வாகனத்தின் மீதிருந்து நரகாசுரனுடன் போரிட்ட போது ஏற்பட்டக் களைப்பால் சற்றே மயக்கம் அடைந்தார் கிருஷ்ணர். அப்போது கிருஷ்ணனுடன் தொடர்ந்து போரிட முற்பட்ட நரகாசுரனை சத்யபாமா போரிட்டுக் கொன்றாள். சத்யபாமா நரகாசுரனின் தாய் முறையினள் ஆவாள். போர்க்களத்தில் உயிர்ப் போகும் நேரத்தில் தன் தந்தையான வராக மூர்த்தியை நினைத்து தன் தவறுணர்ந்து வரம் வேண்டினான் நரகாசுரன். “உலக மக்கள் என்னுடைய இறப்பைப் பண்டிகையாகக் கொண்டாட வேண்டும். நான் கிருஷ்ணப் பட்சத்துப் பின்னிரவில் திரியோதசி திதியில் உயிர் துறப்பதால் சதுர்த்தசி திதியில் விடியற் காலையில் மக்கள்




எண்ணையிட்டு கங்கா ஸ்நானம் செய்து புத்தாடை அணிந்து பட்டாசு வெடித்து, தீபங்களை வரிசையாக ஏற்றி பலகாரங்களை உண்டு மகிழ்ச்சியுடன் இருக்க வேண்டும். நான் உயிருடன் இருந்த போது மக்களைக் கொடுமைப் படுத்தித் துன்பத்திற்கு ஆளாக்கியதால் எனக்கு இந்த வரத்தைத் தாங்கள் தர வேண்டும்" என்று வேண்டினான்.

நரகாசுரன் தாயின் கைகளால் தனக்கு மரணம் ஏற்பட வேண்டும் என்று பெற்றிருந்த வரத்துக் கேற்பப் போர்க்களத்தில் மயக்கம் ஏற்பட்டது போல மாயக்கிருஷ்ணன் காட்சி அளித்தான் என்பதை அறியாத நரகாசுரனின் தாயான சத்யபாமா அவனைக் கொன்றாள். உயிர்போகும் போது தன்னைத் துதித்து வரம் வேண்டிய நரகாசுரனுக்கு அவன் வேண்டிய வரத்தை வழங்கினார் வரதராஜப் பெருமாளான திருமால்.

உலக மக்கள் ஒவ்வொரு ஆண்டும் நரகசதுர்த்தி அன்று விடியற்காலையில் நீராடுவதற்காகவே கங்கையும் எல்லா நீர்நிலைகளிலும் தோன்றுகிறாள் என்பது மக்களின் நம்பிக்கை. நரகசதுர்த்தியன்று மக்கள் உறவினர்களுடனும் நண்பர்களுடனும் தீபாவளிப் பண்டிகையைக் கொண்டாடி மகிழக் காரணமான நரகாசுரன் திருமாலின் மூன்றாவது அவதாரத்தில் பிறந்து திருமாலின் ஒன்பதாவது அவதாரத்தில் மறைந்ததால் வராக அவதாரம் முதல் கிருஷ்ணாவதாரம் வரை ஏழு அவதாரக் காலங்களில் கொடியவனாக வாழ்ந்து இறுதியில் தன் மன இருளை நீக்கி இறைவனை உணர்ந்து இறைஒளியை அறிந்து கொண்டது போல நரக சதுர்த்தியான நல்ல நாளில் நம் மனதில் குடி கொண்டுள்ள தீய எண்ணங்களை நீக்கி உலக மக்களுடன் அன்பும், பாசமும், நேசமும் கொண்டு ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற திருமூலர் வாக்கின்படி வாழ்ந்து உலகைச் செழிப்பு அடையச் செய்வோம்.

திருமலை ஆலயத்தில் தீபாவளி அன்று தீபாவளி ஆஸ்தானம் நடைபெறும். உபயநாச்சிமார்களுடன் திருமலையப்ப ஸ்வாமிக்கு சிறப்பான முறையில் அபிஷேக அலங்காரங்கள் நடைபெற்று புத்தாடைகளை ஜீயர் ஸ்வாமிகள் வழங்குவதும் தீபங்கள் வரிசையாக ஏற்றி வைத்து ஆலயம் ஒளிமயமாக ஒளிர்வது காண கண் கொள்ளா காட்சியாகும்.

தீமை ஒழிந்து நன்மை பெருக திருவேங்கடவன் பாதம் தொழுவோம்.

15

## ஸ்ரீராமனின் திருக்கல்யாண குணங்கள்

# அநஸூயகன்

**அஸூயா என்றால் பொறாமை. அதாவது ஒருவனுடைய நல்ல குணங்களைக் கூட குற்றமாகவே பார்த்தல். இந்த பொல்லாத்தன்மை இல்லாதவனே ஸ்ரீராமன்! மாறாக, குற்றத்தையே குணமாகக் கொள்பவன் அவன்! மேலும், பிறருக்குக் கிடைக்கும் பெருமையைக் கண்டு அவர்களை விட மகிழ்ச்சி கொள்பவனும் அவனே!**



- ஸ்ரீ. உ.வே. வேளுக்குடி கிருஷ்ணன் ஸ்வாமி, சென்னை.

### அரசு வேண்டாம், திருவடியே வேண்டும்!

கடற்கரையில் விபீஷண சரணாகதி நிகழ்ந்த பின் இராமன் அவனுக்கு அங்கேயே லங்கா பட்டாபிஷேகம் செய்தான். அப்போது விபீஷணன் நாத்தழுதழுக்க "நாதா! அடியேன் அரசு வேண்டி வரவில்லை. தேவரீரது திருவடிகளைத் தலையில் சூட வேண்டியே வந்தேன்" என்றான். விபீஷணன் பக்தனான பின் அவனது குற்றம் மலிந்த அரக்கர் குலப் பின்புலத்தைக் கூட குணமாகவே கொண்டான் இராமன். அவனது வேண்டுகோளை உளம் உருக ஏற்று தன் திருவடிகளையே அவனது தலைக்குக் கிரீடமாகச் சூட்டினான்.

பொன்முடி சூடும் அரசனாக இருப்பதைவிட இராமன் திருவடி சூடும் அரசனாக இருப்பதே சாலச் சிறந்தது.

### தாயும் தந்தையும் இராமனே!

தசரதன் இராமனுக்கு இளவரசுப் பட்டம் சூட்ட எண்ணினான். குடிமக்களின் அனுமதி பெறுவதற்காக சபையைக் கூட்டினான். அப்போது இராமன்பால் எல்லையில்லா அன்பு கொண்ட மக்கள் வரிசையாக இராமனின் புகழ் பாடினர். அதில் ஒருவர் எங்கள் இல்லத்தில் ஒரு துயரம் நேர்ந்தால் என் தாயை விட இராமன் எங்களுக்காகத் துன்பப்படுவான். அதே போல் எங்கள் இல்லத்தில் ஒரு மகிழ்ச்சி நேர்ந்தால் என் தந்தையை விட இராமன் எங்களுக்காக மகிழ்ந்து பெருமிதம் கொள்வான். எங்கள் இன்ப துன்பங்களைத் தன் இன்ப துன்பங்களாகக் கொண்ட இராமன் எமது மன்னனாவது பெரும் பாக்யம்" என்றார்.

நமக்குப் பெருமை ஏற்பட்டால் மட்டுமே மகிழ்ச்சி கொள்வோம் நாம்; ஆனால் பிறருக்கு மகிழ்ச்சி ஏற்பட்டாலும் அதனைத் தனதாக எண்ணி மகிழ்பவனே சான்றோன்.

வளரும்...

**கருத்து**

**நாம் பொறாமைப்படாமல் இருந்தால் நம்மைக் கண்டும் எவருமே பொறாமைப் பட மாட்டார்கள்.**



# பரமனின் அருளை அடைந்திட வழி ஸ்ரீவாரி சேவை

ஆங்கிலம் மூலம்- பி.நீலிமா, உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
தமிழாக்கம்- முனைவர் பா. காயத்ரி, சென்னை.

நமது வைணவ சாஸ்திரங்களில் சேவையே தலையாய தர்மமாகக் கருதப்படுகிறது. இந்து சனாதன தர்ம சித்தாந்தங்களில் சேவை ஒரு முக்கிய பங்கு வகிக்கின்றது."மானிட சேவையே மாதவன் சேவை" சுயநலமற்ற அல்லது எந்த ஒரு பலனையும் எதிர்பாராமல் பிறருக்கு செய்யும் சேவையே மேன்மையான சேவையென்றும், அது அந்த பகவானுக்கே கைங்கர்யம் செய்தாற் போலாகும் என்றும் கூறப்படுகிறது.

## ஸ்ரீவாரி சேவையின் தோற்றம்

திருவேங்கடமுடையானின் திருக்கோயிலில், தினமும், பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் ஸ்வாமி தரிசனத்திற்காக கோயிலிலிருந்து 5 கி.மீ. வரை நீண்டு கிடக்கும் வரிசையில் பலமணி நேரம் காத்து கொண்டு நிற்பார்கள். இது தவிர, திருமலையில் தங்குமிடம், கல்யாணகட்டா, அன்னப் பிரசாதம் என காணுமிடமெங்கும் பக்தர்கள் திரளாக இருப்பர்.

திருமலைக்கு வரும் பக்தர்களின் சேவைக்காக தி.தி.தே. 1998 ஆம் ஆண்டு முதன் முதலாக "ஸ்ரீநிவாச சேவை" என்னும் பக்தர்களே பிற பக்தர்களுக்கு சேவை செய்யும் தன்னார்வ சேவை திட்டத்தை கொண்டு வந்தது. அன்று 200 சேவகர்களைக் கொண்டு இருந்த இத்திட்டத்தில் இன்று 2000 திற்கும் மேலான பக்தர்கள் பங்கு கொண்டு, தினமும் திருமலைக்கு வரும் பல்லாயிரக்கணக்கான பக்தர்களுக்கு சேவை புரிகின்றனர். வைகுண்ட ஏகாதசி, ரத சப்தமி, பிரம்மோத்ஸவம், கோடைக்கால விடுமுறை போன்ற நாட்களில் சேவகர்களின் எண்ணிக்கை இரு மடங்கு அதிகரிக்கும்.இந்த "ஸ்ரீவாரி சேவையில்" பங்கேற்று தொண்டு புரிய, ஆந்திரா, தெலுங்கானா, தமிழ்நாடு, கர்நாடகா, கேரளா, மஹாராஷ்டிரா, ஒடிசா, மேற்கு வங்காளம், புதுதில்லி, சத்தீஸ்கர் முதலிய பல்வேறு மாநிலங்களைச் சார்ந்த பக்தர்கள் வருகைப் புரிகின்றனர்.

ஸ்ரீவாரி சேவை தொடங்கி, கடந்த 22 வருடங்களாக 95 ஆயிரம் குழு பல்வேறு குழுக்களாக, 8.60 லட்சம் பெண்களும், 3.90



லட்சம் ஆண்களும் கொண்ட மொத்தம் 12.50 லட்சம் ஸ்ரீவாரி சேவகர்கள் (கடந்த ஜுன் 2022 வரை) திருமலைக்கு வரும் பக்தர்களுக்கு மனமுவந்து சேவை புரிந்துள்ளனர்.

### 100 கோடி மதிப்பில் கட்டிடம்

முதன்முதலில் ஸ்ரீவாரி சேவையின் அலுவலகம், திருமலை முதன்மை கல்யாண கட்டாவில் ஒரு சிறிய அறையாகத்தான் இருந்தது. காலம் செல்லச் செல்ல, கடந்த 20 ஆண்டுகளாக ஸ்ரீவாரி சேவை பல மாற்றங்களை கண்டுள்ளது.

ஸ்ரீவாரி சேவகர்களைக் கருத்தில் கொண்டு தி.தி.தே. ஆண், பெண் சேவகர்களுக்கு தனித்தனியே அனைத்து வசதிகளும் கொண்ட தங்குமிடத்தை 100 கோடி ரூபாய் செலவில் அமைத்துள்ளது. இவ்விரண்டு கட்டிடங்களுள் ஒன்று திருமலையில் ஸ்ரீவராஹ ஸ்வாமி ஓய்வு விடுதிக்கு எதிர்புறமாகவும், மற்றொன்று திருமலையில் கல்யாண வேதிகா கூடத்தின் பின்புறமாகவும் அமைந்துள்ளது.

### மானிட சேவையே மாதவன் சேவை

பக்தர்களுக்கு செய்யும் தொண்டே பகவானுக்கு செய்யும் சேவை என்பது





சாஸ்திர வாக்கு.

இதனை மெய்ப்பிக்க தி.தி.தே. "ஸ்ரீவாரி சேவை : தன்னார்வத்தொண்டு" என்னும் திட்டத்தை துவங்கியது. நாடு முழுவதிலிருந்தும் பக்தர்கள் இந்த அரிய வாய்ப்பை பயன்படுத்தி சக பக்தர்களுக்கு சேவை புரிந்து வருகின்றார்கள்.

கடந்த 22 ஆண்டுகளில் இந்தியா மற்றும் பிற நாடுகளிலிருந்து சுமார் 12.50 லட்சம் ஸ்ரீவாரி சேவகர்கள், திருமலைக்கு வரும் பக்தர்களுக்கு சுயநலமற்ற தன்னார்வத் தொண்டு புரிந்துள்ளனர்.

### சீருடை

பெண்கள் : மெரூன் பார்டர் கொண்ட ஆரஞ்சு வண்ணப் புடவை, மெரூன் பார்டர் கொண்ட இரவிக்கை அல்லது ஆரஞ்சு வண்ண குர்தா, மெரூன் வண்ண பைஜாம், மெரூன் வண்ண சுடிதார். ஆண்கள் : வெள்ளை சட்டை, வெள்ளை பேண்ட்–வேஷ்டி.

### ஸ்ரீவாரி சேவகர்களுக்கான வழிகாட்டுதல்கள்

- இந்து மதத்தவரே ஸ்ரீவாரி சேவை செய்ய விண்ணப்பிக்கலாம்.
- ஸ்ரீவாரி சேவை என்பது திருப்பதி திருமலைக்கு வரும் யாத்திரிகர்களுக்கு செய்யப்படும் இலவச சேவையாகும். சேவகர்கள் ஸ்ரீவாரி சேவையின் பொது சேவை முடிந்த 90 நாட்களுக்குப் பிறகே மீண்டும் ஸ்ரீவாரியின் பொது சேவையை செய்ய விண்ணப்பிக்கலாம்.
- ஸ்ரீவாரி சேவையின் கீழ் சேவை புரிய சேவகர்கள் தபால் மூலமாகவோ, இணையதளம் மூலமாகவோ விண்ணப்பிக்கலாம்.



- ஸ்ரீவாரி சேவை செய்வதற்கு சேவகர்கள் 18–60 வயதிற்கு உட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.
- தனி நபராக ஸ்ரீவாரி சேவைப்புரிய இணையதளம் மூலமாக விண்ணப்பிக்க வேண்டும்.
- குழுவாக சேவைப்புரிய 10–15 நபர்கள் வரை கொண்ட 1 குழுவாக தபால் மூலமாகவோ, இணைய தளம் மூலமாகவோ விண்ணப்பிக் கலாம்.

### தபால் – வழி விண்ணப்பம்

ஸ்ரீவாரி சேவையை செய்ய விரும்பும் பக்தர்கள் தபாலில் கீழ்க்கண்ட முகவரிக்கு விண்ணப்பித்தல் வேண்டும்.

**மக்கள் தொடர்பு அலுவலர்**
**தி.தி.தே. நிர்வாகக் கட்டிடம், அறை எண் :60,**
**கபில தீர்த்தம் சாலை,**
**திருப்பதி – 517 501.**
**தொடர்பு எண் : 0877-2264392/2264217**

தேர்ந்தெடுக்கப்பட்ட ஸ்ரீவாரி சேவகர்களுக்கு திருப்பதி பி.ஆர்.ஓ. அலுவலகத்திலிருந்து ஸ்ரீவாரி சேவை செய்ய அனுமதி படிவத்தின் நகல் அனுப்பப் படும். மேலும் அவர்கள் அளித்த தொடர்பு எண்ணிற்கு குறுஞ்செய்தி (எஸ்.எம்.எஸ்.) அனுப்பப்படும்.

### இணையதளம் வழி விண்ணப்பம்

இந்துக்கள் மட்டுமே ஸ்ரீவாரி சேவைக்கு விண்ணப்பிக்கலாம்.

ஸ்ரீவாரி சேவையில் பங்கு கொள்ள இணைய தளத்தின் மூலமாக "srivariseva.tirumala.org" எனும் வளைதளத்தில் பதிவு செய்ய வேண்டும். மேலும் வழிகாட்டுதல்கள் தி.தி.தே. வலைதளத்தில் பெறலாம். 7 நாட்கள் சேவை செய்ய (தனியாகவோ அல்லது குழுவாகவோ) 18–60 வயதுக்கு உட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.

### ஸ்ரீவாரி சேவை – தி.தி.தே.விற்கு உறுதுணை

தி.தி.தே.விற்கு உறுதுணையாக ஸ்ரீவாரி சேவகர்கள் பல இடங்களிலும் சேவை புரிகின்றனர். அவையாவன: அன்னப்பிரசாதம், ஆலயம், பாதுகாப்பு, லட்டு பிரசாதம், சுகாதாரம், கல்யாண கட்டா, புத்தக வளாகம், பஞ்சகவ்ய பொருட்கள் விற்பனையகம் முதலியன.

### சேவை செய்யும் சில பொது இடங்கள்

- பக்தர்களின் கூட்டத்தை கட்டுப்படுத்த தரிசன கியூ வரிசை மற்றும் காத்திருக்கும் கட்டிடத் தொகுதி
- வி.க்யூ.சி. கட்டிடத்தொகுதி, நாராயணகிரி தோட்டம் ஓய்வு கூடாரம், தரிசன வரிசை, பிரசாத வளாகம் முதலிய இடங்களில் தண்ணீர், மோர், பால், அன்னப்பிரசாதம் முதலியவைகளை பக்தர்களுக்கு பரிமாறும் பொறுப்பு.
- மாத்ருஸ்ரீ தரிகொண்ட வெங்கமாம்பா அன்னப்பிரசாத கூடத்தில் உணவு பரிமாறும் சேவை.
- பக்தர்களின் உடைமைகளை ஸ்கேன் செய்தல்.

- பகவானுக்கு பூமாலை கட்டும் சேவை.
- ஆன்மீக புத்தகங்கள், தி.தி.தே. காலண்டர், பஞ்சகவ்ய பொருட்கள், உலர் மலர் தொழில் நுட்பத்தால் செய்த பகவானின் சித்திரப்படம், அகர்பத்திகள் முதலியவற்றை விற்கும் சேவை.
- தரிசன வரிசை மற்றும் மருத்துவமனையில் முதியோர் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கு உதவும் சேவை.
- தேங்காய் விற்கும் சேவை மற்றும் லட்டு பிரசாத கௌண்ட்டரில் துணிப்பைகளை விற்கும் சேவை.
- லட்டு மற்றும் அன்னப்பிரசாதத்திற்காக முந்திரியைப் பிரித்தல்.
- நிர்வாகத்தை மேலும் சீர்ப்படுத்த பக்தர்களிட மிருந்து ஆலோசனைகளைப் பெறுதல்.

### தொழில் முறை சார்ந்த சேவைகள்

பொது சேவைகளை தவிர்த்து தி.தி.தே. பரக்கா மணி , நவநீத சேவை முதலிய தொழில் முறை சார்ந்த சேவைகளையும் தொடங்கியுள்ளது. பக்தர்கள் ஸ்வாமி உண்டியலிலிட்ட காணிக்கையை காகித நோட்டு, நாணயம் எனத் தனியாகப் பிரித்து எண்ணி கணக்கிடுவதே பரக்காமணி என்றழைக்கப்படுகிறது.

இச்சேவை தி.தி.தே. ஆகஸ்ட் மாதம் 2012 ஆம் ஆண்டு துவக்கியது. இச்சேவைக்கு 25–65 வயதிற்கு உட்பட்ட ஆண் சேவகர்கள் மட்டும் விண்ணப்பிக்க லாம். நமது இந்து சனாதன தர்மத்தில் சாஸ்த்திரம் மற்றும் புராணங்கள் காட்டும் வழியில் பசு என்னும் நமது கோமாதாவை சேவிக்க தி.தி.தே. ஆகஸ்ட் மாதம் 2021 ஆம் ஆண்டு ஸ்ரீகிருஷ்ண ஜன்மாஷ்டமி தினத்தன்று திருமலை எஸ்.வி. கோசாலையில் நவநீத சேவை திட்டத்தை துவக்கி வைத்தது. இச்சேவையில் கோசாலையைத் தூய்மைப்படுத்துதல், கோலமிடுதல், சாணம் தட்டு தல், பசுவிற்கு உணவளித்தல், பால் கடைந்து வெண் ணெய் எடுத்தல் முதலிய தொண்டுகளைப் புரியலாம்.

பக்தர்கள் இணையதளம் மூலமாக மட்டும்தான் நவநீத சேவைக்கு விண்ணப்பிக்க இயலும். மேலும், 35–50 வயதுக்கு உட்பட்ட பெண் சேவகர்கள் மட்டுமே இச்சேவைக்கு விண்ணப்பிக்கலாம்.

### திருப்பதியில் ஸ்ரீவாரி சேவை

திருமலையில் ஸ்ரீவாரி சேவையின் வெற்றி பயணத்தை முன்னிட்டு 2014 ஆம் ஆண்டு இச்சேவை திருப்பதியிலும் தொடங்கப்பட்டது. திருப்பதி, திருச்சானூர், ஸ்ரீநிவாசமங்காபுரம் அப்பளாய குண்டா, எஸ்.வி. கோசாலை, தி.தி.தே. மருத்துவ மனை, தி.தி.தே. ஓய்வு விடுதிகள், அன்னப்பிரசாத வளாகம் முதலிய பல இடங்களிலும் ஸ்ரீவாரி சேவகர் கள் தொண்டு புரிகின்றனர். ஆண் மற்றும் பெண் சேவகர்களுக்கு திருப்பதி இரயில் நிலையம் எதிரி லுள்ள விஷ்ணு நிவாசத்தில் தங்கும் வசதி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

### பஜனை மற்றும் சத்சங்க வகுப்புகள்

தி.தி.தே. பயிற்சி அளிப்பதின் மூலம் ஸ்ரீவாரி சேவகர்களுள் சேவை மனப்பான்மையும், ஆன்மீக உணர்வையும் அதிகரிக்க முயற்சி செய்கிறது.






# இந்து சனாதன தர்மத்தின் முன்மாதிரி சேவகர்கள்







திருமலை திருப்பதியில் சேவை செய்வது மட்டுமின்றி தி.தி.தே. நாட்டின் பல்வேறு பகுதிகளில் நடத்தும் ஆன்மீக மற்றும் தார்மீக நிகழ்ச்சிகளிலும் ஸ்ரீவாரி சேவகர்கள் ஆர்வத்துடன் பங்குகொள்கின்றனர்.

தி.தி.தே. ஸ்ரீவேங்கடேஸ்வர ஸ்வாமியின் திவ்ய க்ஷேத்திரத்தை விசாகப்பட்டிணம், புவனேஸ்வர், அமராவதி போன்ற பல்வேறு இடங்களில் திறந்து வைத்த போதும் சரி அல்லது கார்த்திகை தீபோத்ஸவம், வேங்கடேஸ்வர வைபவோத்ஸவம், ஸ்ரீநிவாச கல்யாணம் போன்ற ஆன்மீக நிகழ்ச்சிகளை நடத்தும் போதும் சரி, அனைத்து இடங்களிலும் ஸ்ரீவாரி சேவகர்கள் மனமார்ந்த சேவையை அப்பகுதி பக்தர்களுக்கு செய்து, இந்து சனாதன தர்மத்தின் முன் மாதிரி சேவகர்களாக விளங்குகின்றனர்.

எனவே தினமும், காலையிலும் மாலையிலும் திருமலை சேவா சதன் 2ல் பஜனை மற்றும் சத்சங்க பயிற்சி வகுப்புகளும், திருமலையில் செய்யத் தக்கவை செய்யத்தகாதவை பற்றிய விழிப்புணர்வையும் கற்பித்து வருகிறது.

இதுபோலவே, எல்லா செவ்வாய் மற்றும் வெள்ளிக்கிழமைகளிலும் பஜனை மற்றும் சத்சங்க வகுப்புகளை திருப்பதி விஷ்ணு நிவாசத்தில் சேவகர்களுக்காக நடத்தி வருகிறது.

## ஸப்தகிரி வினாடி வினா போட்டி எண்.1 ஆகஸ்ட் 2022 விடைகள்

1. பொள்ளாப் பிள்ளையார்.
2. ஆதிசேஷன்.
3. ஆண்டாள்.
4. திருவண்வண்டூர்.
5. திருதராஷ்டிரன், பாண்டு.
6. உத்திராடம்.
7. ஸ்ரீராமர்.
8. ஆடி மாதத்தில் பூரம் நட்சத்திரம்.
9. வேதாந்த தேசிகர்.
10. ஆதிசேஷன்.
11. பன்றி, குதிரை.
12. திருவார்ப்பில் இருக்கும் ஸ்ரீகிருஷ்ணர் கோயில்.
13. ஜாம்பவதி.
14. ரோஹிணி, அஷ்டமி.
15. கல்வி, வாக்குவன்மை.




## போட்டி எண்.1ற்கான சரியாக பதில் எழுதிய போட்டியாளர்களில் வெற்றி பெற்றவர்கள்

1. செல்வி எஸ். சர்வேஸ்வரி, வீரப்பா நகர், கிருஷ்ணகிரி.
2. செல்வி பி.எஸ். ஜெயஸ்ரீ, வாலாஜாபேட், ராணிபேட்டை
3. செல்வி க. காவ்யா, விளமல், திருவாரூர்.

# வைணவக் குறுக்கெழுத்துப் புதிர் - 75

**இடமிருந்து வலம்**

1. நகுலன் புதுப்பித்த தலம்....(8)
5. வாமனர் மகாபலியிடம் கேட்ட தானம்....(7)
6. ஸ்ரீகிருஷ்ண பகவான் தன்னுடைய திருக்கரங்களால் ....(8) மலையைத் தாங்கினார்.
20. ஆழ்வார் பாசுரங்கள் உற்சவ காலங்களில் கோயிலில் விண்ணப்பம் செய்யும்படி ஏற்பாடு செய்தவர்.....(5)
23. இராமன் பிறந்த புண்ணிய பூமி..(4)

**வலமிருந்து இடம்**

3. பாண்டவர்கள் வனவாசத்தின் போது ஈசனை வழிபட்ட தலம்....(9)
4. ...(8) கனவில் தோன்றி பெருமாள் பாடும் ஆற்றலை வழங்கினார்.
9. வாமன அவதாரம் .....(2) கிரகத்திற்கு அதிபதி.
13. சிங்க பெருமாள் கோயிலில் வீற்றிருக்கும் நரசிம்மர்...(11)
22. சந்திர புஷ்கரணி, கொள்ளிடம் காவேரி தீர்த்தங்கள் உள்ள தலம்....(5)

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | | | | ■ | | ■ | 2 |
| | | | | | | | | 3 | | ■ | |
| | ■ | ■ | | | | | | | | 4 | |
| | 5 | | | | | | | ■ | | ■ | |
| | ■ | | 6 | | | | | | 7 | | |
| | 8 | | ■ | ■ | | ■ | | ■ | | 9 | |
| | | 10 | | 11 | | 12 | | | | | 13 |
| | | | | | | | 14 | ■ | ■ | | |
| | 15 | | 16 | | | | ■ | ■ | ■ | | |
| | ■ | | ■ | | | | ■ | ■ | ■ | 17 | |
| | ■ | 18 | ■ | 19 | 20 | | | | | ■ | |
| 21 | | | | | 22 | ■ | ■ | 23 | | | 24 |

தொகுப்பு :
திரு. எஸ். ராஜ்குமார்,
சென்னை.

புதிருக்கு விடை அறிய
35ம் பக்கம்
பார்க்கவும்...

**மேலிருந்து கீழ்**

2. நான்கு யுகங்களில் ஒன்று....(6)
8. பஞ்ச பூதங்களில் ஒன்று.....(2)
11. சப்த தீர்த்தங்களில் ஒன்று....(3)
12. சந்திரன் ஷயரோக நோய் சாபத்தில் இருந்து நீங்க வழிபட்ட தலம்....(4)
18. நவத்திருப்பதி தலங்களில் சந்திரன் கிரகத்திற்குரிய தலம்....(4)
19. தேவர்களும் அசுரர்களும் பாற்கடலைக் கடைந்தபோது ....(3) பசுக்கள் வெளிப்பட்டன.
21. திருமங்கையாழ்வார் அருளிச் செய்தது....(10)
22. தசாவதாரத்தில் ஏழாவது அவதாரம்... (7)
24. கலியுக வைகுண்டம்....(5)

**கீழிருந்து மேல்**

7. ஆதிசேஷன் என்னும் பாம்பு படுக்கையில் படுத்திருப்பவர்......(5)
10. கச்யப மகரிஷியின் தந்தை பெயர்.....(3)
14. பஞ்ச தருக்களில் ஒன்று......(5)
15. பஞ்ச நாராயணத் தலங்களில் ஒன்று.....(3)
16. கூரத்தாழ்வார் அவதரித்த ஊர்.....(3)
17. மார்கழி மாத வளர்பிறையில் வருவது.....(4) ஏகாதசி.

**தடை விதிக்கப்பட்ட பொருட்கள்**

திருமலை ஆலயத்திற்குள் தேங்காய், செல்போன், டிஜிட்டல் கைகடிகாரங்கள் போன்ற மின்னணு பொருட்கள், காலணிகள், வெடிப்பொருட்கள், பிளாஷ்டிக் பொருட்கள் எடுத்து செல்லுதல் கூடாது



# துலா ஸ்நானம்

-டாக்டர் த.வெங்கடேஸ்வரா,
அம்பத்தூர்.

ஐப்பசி மாதத்தை துலா மாதம் என்று போற்றுவர். இந்த மாதத்தில் இரவு நேரமும் பகல் நேரமும் சமமாக இருப்பதால் இதற்கு துலா (தராசு) மாதம் என்று பெயர். ஐப்பசி முதல் தேதி அன்று காவிரியில் நீராடுவது புண்ணியம் என்கின்றன ஞான நூல்கள். துலா மாதத்தில் இதர நதிகளும் புண்ய தீர்த்தங்களும் காவேரியில் சேர்ந்து விளங்குகின்றன. ஆதலால் அப்போது ஸ்நானம் செய்பவர்கள் பஞ்ச மகா பாதகங்களில் இருந்தும் விடுபடுகின்றனர். அதில் ஸ்நானம் செய்தவர்கள் அச்வமேத யாகம் செய்த பலனையும் அடைகின்றனர்.

ஐப்பசி முதல் நாளன்று திருப்பராய் துறையிலும், ஐப்பசி கடைசி நாள் மயிலாடுதுறையிலும் நீராடுவது விசேஷமாகக் கருதப்படுகிறது. துலா மாதமாகிய ஐப்பசியில் பிரம்ம முகூர்த்தத்தில் காவிரி நதியில் நீராடினால் மகாவிஷ்ணுவின் அருள் கிட்டும். துலா மாதத்தில் சூரிய உதயத்திற்கு சுமார் ஒன்றரை மணி நேரத்திற்கு முன் காவிரியில் மும்மூர்த்திகளும், முப்பத்து முக்கோடி தேவர்களும், 68 ஆயிரம் ரிஷிகளும், முனிவர்களும், சித்தர்களும் நீராடுவதாக சாஸ்திரம் குறிப்பிடுகிறது. துலா மாதத்தில் காவிரியில் நீராடுவது புனிதமானது என்று சாஸ்திரம் சொல்லும் அதே வேளையில், இயலாத நிலையில் "கடைமுகம்" என்று சொல்லப்படும் ஐப்பசி 30 ஆம் தேதி நீராடி பலன் பெறலாம். அன்றும் நீராட முடியாதவர்கள், "முடவன் முழுக்கு" என்று

## அனந்தாழ்வான் தோட்டம்

வேங்கடவன் ஸ்ரீதேவி தாயாரோடு இரவு வேளையில் அனந்தாழ்வானின் பூந்தோட்டத்தில் உலாவி, பூக்களைப் பறித்து தாயாருக்குச் சூட்டி மகிழ்ந்தார். மறுநாள் காலையில் அனந்தாழ்வான் பூக்கள் கீழே விழுந்துக் கிடந்ததைக் கண்டு கோபமுற்று துக்கத்தில் ஆழ்ந்தார்.

ஒருநாள் இரவு நேரத்தில் அனந்தாழ்வான் ஒரு மரத்தின் பின்னால் மறைந்து கொண்டு, நந்த வனத்தை நாசம் செய்வது யார் என்று பார்த்தார். வழக்கம்போல் நள்ளிரவில் ஸ்வாமியும் தேவியும் பூக்களைப் பறிக்க முற்பட்ட போது அனந்தாழ்வான் அவர்களைத் துரத்தினார். ஸ்வாமி தப்பித்து வெளியே ஓட, தாயார் மட்டும் அகப்பட்டுக் கொண்டாள். அனந்தாழ்வான், தாயாரைப் பிடித்து அங்கிருந்த சம்பக மரத்தில் கொடிகளால் கட்டிப் போட, தாயாரோ தன்னை விட்டு விட வேண்டினாள். உன்னை பிடித்து வைத்தால்தான் உன் புருஷன் வருவான் என்றார் அனந்தாழ்வான்.

பின்னர், அங்கே புருஷன் வடிவில் நின்றிருந்த வேங்கடவன் அனந்தாழ்வானுக்கு காட்சி அளித்தார். அப்பொழுது ஸ்வாமியின் திருமார்பில் "திருமார்பு நாச்சியார்" இல்லையே எனப் பதறினார். திரும்பிப் பார்த்து தான் மரத்தில் கட்டியிருந்த அந்தப் பெண்ணே "ஸ்ரீதேவி தாயார்" என்பதை உணர்ந்து எம்பெருமானின் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினார். ஸ்வாமியும், உம்முடைய பக்தியை உலகிற்கு உணர்த்தவே நானும் தாயாரும் இவ்வாறு செய்தோம் எனக் கூறினார்.



## திருமலையில் பாக்சவாரி





மாலை 5 மணியளவில் திருமலையப்ப ஸ்வாமி சகல திவ்ய அலங்காரங்களுடன் உபய தேவிமார்களுடன் தங்கத் திருச்சியில் வீதி புறப்பாடு கண்டருளுவார். கோயிலை அப்பிரதக்ஷிணமாகச் சுற்றிக் கொண்டு தெற்கு மாடவீதியின் கோடியிலுள்ள அனந்தாழ்வான் தோட்டத்திற்கு எழுந்தருளுவார். அங்கே பெரிய ஜீயர் ஸ்வாமிகள், சின்ன ஜீயர் ஸ்வாமிகள் தலைமையில் பிரபந்த கோஷ்டி தமிழ் வேதமாம் நாலாயிரத்திவ்யப் பிரபந்தங்களை சேவிப்பார்கள். பின்பு எம்பெருமானுக்கு நிவேதனம் ஆனதும், கற்பூர மங்கள ஆரத்திக்குப் பின்னர், அனந்தாழ்வானின் வம்சத்தாருக்கு கோயில் சார்பாக பரிவட்ட மரியாதை அளிக்கப்படும். இதில் தேவஸ்தான உயர் அதிகாரிகளும் கலந்து கொண்டு கலியுகத் தெய்வமாம் திருவேங்கடமுடையானின் திருவருளைப் பெறுகிறார்கள்.

சொல்லப்படும் கார்த்திகை முதல் தேதி நீராடினாலும் புனிதம் பெறலாம் என்று ஞான நூல்கள் கூறுகின்றன.

ஐப்பசி மாதத்தில் காவிரியில் நீராடுவது காசியில் ஓடும் கங்கை நதியில் நீராடுவதற்கு சமம் என்று புராணங்கள் கூறுகின்றன. ஏனெனில் ஐப்பசி மாதமான துலா மாதத்தில் கங்கை, யமுனை, சரஸ்வதி முதலான பாரதத்தில் ஓடும் நதி தேவதைகள் அனைத்தும் காவிரியில் நீராடி, தங்களிடம் மானிடர்கள் கரைத்துச் சென்ற பாபக்கறைகளைப் போக்கிக் கொள்கின்றது என்று காவிரி மாகாத்மியம் கூறுகிறது.

மக்கள் தங்களுடைய பாவங்களைப் போக்க கங்கையில் நீராடி நீராடி கங்கைக்கே பாவம் அதிகமாக சேர்ந்து தோஷம் ஏற்பட தன் பாவங்கள் தீர என்ன செய்ய வேண்டும்? என்று விஷ்ணு பகவானிடம் கேட்டாள் கங்கை. அதற்கு ஸ்ரீமகாவிஷ்ணு "நீ காவேரி நதியில் நீராடு உன் பாவம் நீங்கும்" என்றார்.

அதன்படியே ஒவ்வொரு ஆண்டும் ஐப்பசி மாத அமாவாசையன்று கங்காதேவி காவேரியில் நீராடி மக்கள் தன்னிடம் கரைத்த பாவங்களைப் போக்கிக் கொள்கிறாள் என்று புராண இதிகாசங்களில் போற்றப்படுகின்றது.

"மக்களுக்கு புத்தியும் முக்தியும் அளிக்கும் துலா மாதத்தில் காவிரியில் நீராடுபவர்கள் தன்னையும், தங்கள் குடும்பத்தினரையும், முன்னோர்களின் பாபங்களையும் போக்கிக் கொள்வதுடன் வளமான வாழ்வு காண்கிறார்கள் என்று ஞான நூல்கள் கூறுகின்றன. துலா காவிரி நீராடல் அழகு, ஆயுள், ஆரோக்கியம், செல்வம், கல்வி, மாங்கல்ய பாக்கியம், குழந்தைப் பேறு, வலிமை ஆகியவற்றை தரும். எனவே, காவிரியை நினைத்தாலும், சிறப்பைக் கேட்டாலும், பாபங்கள் விலகும்" என்றார் பிரம்மா.

ஐப்பசி மாதத்தில் காவிரியில் நீராடி நீர்க்கடன் செலுத்துவோரின் முன்னோர்கள் சொர்க்கத்தை அடைகிறார்கள். காவிரி தேவியை வணங்கி துதிப்பவர்கள் சொர்க்க லோகம் செல்லும் பாக்கியத்தைப்



பெறுகிறார்கள். தன்னில் நீராடுபவர்களின் வேண்டுதல்களை நிறைவேற்றி வளமான வாழ்வு தருபவள் என்கிறது காவிரி புராணம். தேவதைகளும், தேவர்களும், மானிடர்களும் துலா மாதத்தில் காவிரியில் நீராடி தங்களிடம் உள்ள பாபங்களைப் போக்கிக் கொண்டதும், அந்தக்கறைகள் அனைத்தையும் காவேரி போக்கிக் கொள்ள திருமங்கலக்குடி திருத்தலத்திலும், மாயூரத்தில் (மயிலாடுதுறை) உத்தர வாகினியாக (தெற்கிலிருந்து வடக்கு நோக்கிப் பாய்வது) இருந்து காவிரி போக்கிக் கொள்கிறாள் என்பது ஐதீகம்.

ஸ்ரீரங்கம் திருத்தலத்தில் அருள் புரியும் ரங்கநாதருக்கு ஐப்பசியில் தங்கக் குடங்களில் ஸ்ரீரங்கத்தின் தென் பகுதியில் உள்ள அம்மா மண்டபம் காவிரி நதிக்கரைப் படித்துறையிலிருந்து புனிதத் தீர்த்தத்தை சேகரித்து யானை மீது எடுத்து வந்து அபிஷேகம் செய்வர். மற்ற மாதங்களில் ஸ்ரீரங்கத்தின் வடக்கில் உள்ள கொள்ளிடத்தில் இருந்து வெள்ளிக் குடங்களில் தீர்த்தம் கொண்டு வந்து அபிஷேகம் செய்வார்கள்.

துலா காவேரியின் நீர்த்திவலைகள் ஒவ்வொன்றும் புண்ணிய தீர்த்தமாகும். அதிலுள்ள மணல்கள் எல்லாம் தேவதைகள், அதனால்தான் உலகிலுள்ள புனித நதிகள் அனைத்தும் துலா மாதத்தில் காவேரியில் நீராடி, மக்கள் தங்களிடம் கரைத்த பாவக் கறைகளைக் கழுவி புனிதமடைகின்றன.

துலா மாதத்தில் காவேரியில் நீராடுபவர்கள், தங்கள் குடும்பத்தினரையும் சேர்த்து, மூன்று கோடி உறவினர்களையும் கடைத்தேற்றுகிறார்கள். துலா மாதத்தில் காவேரியில் நீராடி, முன்னோர்களுக்கு பிதுர்பூஜை செய்து அன்னதானம், ஆடை தானம் அளித்தால் பித்ருக்கள் மகிழ்ந்து வாழ்த்துவார்கள். அழகு, ஆயுள், ஆரோக்கியம், சொல்வளம், கல்வி, வாழ்வில் சுகம் என எல்லாம் கிட்டுமென்று துலாக்காவேரி மாகாத்மியம் கூறுகிறது.

ஆதி, இடை, கடை என்னும் மூன்று அரங்கங்களையும் தன்னகத்தே கொண்டு, சதாசர்வ காலமும் இறைவன் நாராயணனின் திருவடியைத் தழுவி வணங்கும் காவேரியின் பேறும் பெருமையும் தன்னிகரற்றது. தட்சிண கங்கை என்று போற்றப்படும் காவேரிக்கு பொன்னி, விதிசம்பூதை, கல்யாணி, சாமதாயினி, கலியாண தீர்த்தரூபி, உலோபமுத்ரா, சுவாசாஸ்யாமா, கும்பசம்பவ வல்லவை, விண்டுமாயை, கோனிமாதா, தக்கணபதசாவணி என பல பெயர்கள் உள்ளன.

காவேரியில் துலா ஸ்நானம் செய்து ஸ்ரீரங்கநாதரை வழிபட்டதன் பலனாக சந்தனு மகாராஜா பீஷ்மரை புத்திரனாக அடைந்தார். அர்ச்சுனன், துலா ஸ்நானம் செய்து ஸ்ரீரங்கநாதப் பெருமாளை துதித்து சுபத்ராவை மணம் புரிந்தான் என்று புராணம் கூறுகிறது.

தலைக்காவேரி, ராமாபுரம், ஸ்ரீரங்கம், திருப்பராய்த்துறை, திருவானைக்காவல், சப்தஸ்தானம், திருவையாறு, புஷ்பாரண்யம், திருச்சாய்க்காடு, திருவெண்காடு, மயிலாடுதுறை, கும்பகோணம், திருவிடைமருதூர் முதலிய காவேரி நீர்த்துறைகள் துலா மாதத்தில் நீராட சிறந்தவையாகக் கருதப்படுகின்றன. துலாக்காவேரி ஸ்நானம் செய்பவர்கள், காவேரி நதிக்குப் பூஜை செய்து வழிபடுவதுடன், அருகில் அரசமரம் இருந்தால் அதற்கு நீர் வார்த்து, அதை வலம் வந்து வணங்குவது புண்ணிய பலன் தரும்.

காவேரிக் கரையில் கோமாதா பூஜை செய்தால் மேன்மேலும் புண்ணிம் கிட்டும்.



கர்நாடக மாநிலத்தில் மடிக்கேரி மாவட்டத்தில் பிரம்மகிரி மலைத்தொடரில் தலைக்காவேரியில் காவேரி நதி துவங்கி, கர்நாடக மாநிலம் ஸ்ரீரங்கப்பட்டிணம் (ஆதி ரங்கம்), ஸ்ரீரங்கம் (மத்திய ரங்கம்), திருப்பேர் நகர் என்ற கோவிலடி (அப்பாலரங்கம்), சாரங்கபாணி கோவில் (சதுர்த்தரங்கம்) கும்பகோணம், பரிமள ரங்கநாதர் கோவில், திருஇந்தளூர், மாயவரம் போன்ற திருத்தலங்கள் வழியாக பாய்ந்தோடி இறுதியில் வங்காள விரிகுடாவில் கலக்கிறது.

07-08-2022 முதல் 10-08-2022 வரை நடைபெற்ற திருமலையப்ப ஸ்வாமி பவித்ரோத்ஸவத் திருக்காட்சிகள்.
இந்நிகழ்ச்சியில் தி.தி.தே. செயலாட்சித்தலைவர் திரு. ஏ.வி. தர்மா ரெட்டி ஐ.டி.இ.எஸ். அவர்கள் பங்குகொண்ட போது











## திருச்சானூர்
## ஸ்ரீபத்மாவதி தாயார் பிரம்மோத்ஸவம்
### 2022, நவம்பர் 20 முதல் 28 வரை



**20-11-2022 ஞாயிற்றுக்கிழமை**
பகல் : துவஜாரோஹணம்
இரவு : சிறிய சேஷ வாகனம்

**21-11-2022 திங்கட் கிழமை**
பகல் : பெரிய சேஷ வாகனம்
இரவு : ஹம்ஸ வாகனம்

**22-11-2022 செவ்வாய்க்கிழமை**
பகல் : முத்துப்பந்தல் வாகனம்
இரவு : சிம்ம வாகனம்

**23-11-2022 புதன் கிழமை**
பகல் : கல்பவிருக்ஷ வாகனம்
இரவு : ஹனுமத்வாகனம்

**24-11-2022 வியாழக்கிழமை**
பகல் : பல்லக்கு உற்சவம்,
மாலை : வசந்தோத்ஸவம்
இரவு : யானை வாகனம்

**25-11-2022 வெள்ளிக்கிழமை**
பகல் : சர்வபூபால வாகனம்
இரவு : கருட வாகனம்

**26-11-2022 சனிக்கிழமை**
பகல் : சூரியப்பிரபை வாகனம்
இரவு : சந்திரப்பிரபை வாகனம்

**27-11-2022 ஞாயிற்றுக்கிழமை**
பகல் : திருத்தேர்
இரவு : குதிரை வாகனம்

**28-11-2022 திங்கட்கிழமை**
பகல் : சக்கர ஸ்நானம்
பஞ்சமி தீர்த்தம்
இரவு : துவஜாவரோஹணம்

# ஸ்ரீகனக துர்கா அம்மன் அலங்காரங்கள்

**புரட்டாசி மாதம் வளர்பிறை பிரதமை முதல் தசமி வரை மிகச் சிறப்பாக தேவி நவராத்திரி உற்சவம் நடைபெறும். ஆந்திர மாநிலம் விஜயவாடாவில் எழுந்தருளி சேவைசாதிக்கும் ஸ்ரீகனக துர்கா தேவி உத்ஸவமூர்த்தி ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு அலங்காரத்திலும் ஒன்பது நாட்கள் எழுந்தருள பத்தாம் நாள் விஜயதசமி விழா வெகு விமர்ச்சையாக நடைபெறும்.**

**நவராத்திரியை முன்னிட்டு அம்மனின் சிறப்பு அலங்காரங்கள் "ஸப்தகிரி" வாசகர்களுக்காக...**



## தங்கக்கவச அலங்காரத்தில் ஸ்ரீதுர்கா தேவி

நவராத்ரியின் முதல் நாள் துர்கா தேவியை பொன் கவசத்தால் அலங்கரிப்பர்.8 திருக்கரங் களோடு மஞ்சள் பூசிய திருமுகத்துடன் தரிசனமளிப்பாள். சிம்ம வாகனத்தில் சங்கு, சக்கரம், கதை, திரிசூலம், பாசம், வாள், பரிகா எனும் ஆயுதங்களை தரித்து அனைத்து துன்பங்களையும் போக்குகின்றாள். இவளை வணங்குவதால் அனைத்தும் வெற்றியே. பூஜைப் பொருட்கள் : மஞ்சள் அக்ஷதை, மஞ்சள் பூக்கள். நிவேதனம் : புளியோதரை.



## ஸ்ரீபாலதிரிபுர சுந்தரி தேவி

திரிபுரத்தில் இவளே முதல் தேவதை. மனம், புத்தி, அகங்காரம் இவ்வம்மனின் ஆதினத்தில் இருக்கும். அபயஹஸ்தம், வரத முத்திரையுடன் வீற்றிருப்பாள். இவளை வணங்குவதால் மகிழ்ச்சி கிடைக்கும். ஸ்ரீசக்ர சம்பிரதாயத்தில் ஷோடச கல்விக்கு இவளே அதிதேவதை. இவளின் அருளால் நல்ல மக்கட்பேறு கிடைக்கும். பூஜை முறை : குமரிகள் பூஜை பண்ண வேண்டும். நிவேதனம் : பாயசம்



## ஸ்ரீகாயத்ரி தேவி

வேதமாதா காயத்ரி. மந்திரங்களுக்கெல்லாம் மூல சக்தி, ஐந்து முகங்களுடன் சங்கு, சக்கரம், கதை, அங்குசம் அணிந்திருப்பாள். காயத்ரி தேவியை வணங்குவதால் அறிவாற்றல் பெருகும், மந்திர சக்தி கிடைக்கும், இன்னல்கள் விலகும், ப்ரஹ்ம ஞானம் ஏற்படும். காயத்ரி மந்திர பாராயணம் வேதப்பாராயணம் செய்த பலன் அளிக்கும். பூஜை முறை : வேத பண்டிதர்களை அர்சித்தல். நிவேதனம் : இஞ்சிவடை.



## ஸ்ரீஅன்னபூரணி தேவி

இரு திருக்கரங்களில் அமிழ்தினைக் கொண்ட மாணிக்கப்பாத்திரமும், இரத்தின கரண்டியும் கொண்டு அன்னபூரணியாக தரிசனம் அளிக்கின்றாள் தாயார். சிவந்த மேனியுடன், ஒளி மயமான முகத்துடன், விசாலமான திரி நேத்திரத்துடன் வீற்றிருப்பாள். இவ்வம்மனை தரிசித்தால் புத்திரபௌத்திராபிவிருத்தி, பிரம்ம தேஜஸ் பெறுவர். பூஜைப் பொருட்கள் : சிவப்பு அல்லது வெண்ணிறப்பூக்கள். நிவேதனம் : தயிர் சாதம், கட்டுப்பொங்கல்.



## ஸ்ரீலலிதா திரிபுரசுந்தரி தேவி

திரிபுரத்தில் இவள் இரண்டாவது வழிபாட்டிற்குறிய ஆராதனை தேவதை. சைதன்யம் எனும் அக்னி குண்டத்தில் இருந்து அவதரித்தவள் இத்தாயார். திருக்கரங்களில் பாசம், அங்குசம், கரும்பு, மலர் அம்பு தரித்து காட்சி அளிப்பாள். இரு புறங்களிலும் லக்ஷ்மி, சரஸ்வதி வெஞ்சாமரம் வீசி சேவை புரிந்து கொண்டிருப்பர். இவளை வணங்குவதால் அனைத்து ஐச்வர்யங்கள் கிட்டும். பூஜைப் பொருட்கள் : குங்குமம். நிவேதனம் : பாயசம்.



# தேவி நவராத்ரி மஹோத்ஸவம்



## ஸ்ரீமஹாலக்ஷ்மி தேவி

இருபுறமும் யானைகள் துதிக்க, இரு திருக்கரங்களிலும் தாமரையைத் தரித்து, அபய-வரத முத்திரையுடன் ஸ்ரீமஹாலக்ஷ்மி தாயார் பக்தர்களுக்கு தரிசனம் அளிக்கின்றாள். திரிபுரத்தில் ஸ்ரீமஹாலக்ஷ்மி இடைப்பட்ட சக்தியாவாள். இவளை வணங்குவதன் மூலம் லௌகீக சம்பத்துடன் அலௌகீகமான மோட்சமும் கிடைக்கும். இவள் விரைவான பலன்களை வழங்குபவள். பூஜை பொருட்கள் : சிகப்பு மலர்கள். நிவேதனம் : பூர்ணம்.



## ஸ்ரீமகா சரஸ்வதி தேவி

மூல நட்சத்திரத்தன்று சரஸ்வதி தேவி அலங்காரத்திற்கு எங்கும் இல்லாத முக்கியத்துவம் உண்டு. வாக்கு, புத்தி, விஞ்ஞானம், கலை இவற்றிற்கு இவள் அதிதேவதை. வீணை, புத்தகம், அக்ஷமாலை, வெண்ணிற ஆடை தரித்து மயில் வாகனத்தில் தரிசனமளிப்பாள். இவளை வழிபடுவதினால் லௌகீக கல்வியுடன் அலௌகீகமான மோக்ஷ கல்வியும் கிடைக் கும். பூஜைப் பொருட்கள் : வெண்ணிற பூக்கள். நிவேதனம் : சர்க்கரைப்பொங்கல்.



## ஸ்ரீதுர்கா தேவி

ஸ்ரீதுர்கா தேவி அனைத்து இன்னல்களையும் போக்கி உக்ர வடிவில் காட்சியளிப்பாள். சாந்த மூர்த்தியாக பக்தர்களைக் காத்து நோய்களை நீக்குகின்றாள். சிவப்பு சேலை, மணிக் கிரீடம், திருக்கரங்களில் கத்தி, கவசம், கதை, சங்கு, கலசம், திரிசூலம், சக்கரம், வில்லம்புகளுடன் சிம்ம வாகனத்தில் வீற்றிருப்பாள். பூஜைப் பொருட்கள் : சாமந்தி, சம்பங்கி, மல்லிகைப் பூக்கள், மாதுளம் பழம், சிவப்பு அக்ஷதை. நிவேதனம் : பொங்கல், புளியோதரை.



## ஸ்ரீமஹிஷாசுர மர்த்தினி தேவி

அனேக ஆயுதங்களுடன் சிம்ம வாகனத்தில் தரிசனமளிப்பாள் தாயார். மஹிஷாசுர சம்ஹாரம் நடைபெற்ற நவமி நாளை மஹாநவமியாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது. இவளை வழிப்பட்டால் எதிரி பயம் இராது. அனைத்திலும் வெற்றியே கிட்டும். பூஜைமுறை : சுமங்கலி பூஜை செய்து மங்களப்பொருட்களான மஞ்சள், குங்குமம், புத்தாடைகளை அளித்தல் வேண்டும். நிவேதனம் : பானகம், வடை, புளியோதரை, பாயசான்னம், வடபருப்பு.



## ஸ்ரீராஜ ராஜேஸ்வரி தேவி

வெற்றி தேவதையாக பூஜையை ஏற்கிறாள் தாயார். சகலபுவன பிரம்மாண்டத்திற்கு ஆராதனை தெய்வம். பரமேஸ்வரரின் சரீரத்தை ஆசனமாகக் கொண்டு வீற்றிருப்பாள். தன்னை வணங்குபவர்களுக்கு இச்சா, ஞான, கிரியா சக்திகளை வரமாக அருள்வாள். மாயையில் சிக்குண்டிருக்கும் மானிடரின் ஆன்மா இவளை வழிபடுவதினால் ஆன்ம ஈடேற்றம் பெறும். பூஜைப் பொருட்கள் : வாடாத மஞ்சள் நிற பூக்கள். நிவேதனம் : லட்டு.








15-08-2022 அன்று இந்திய சுதந்திர தின 75 ஆம் ஆண்டு அமுத விழாவை முன்னிட்டு தி.தி.தே. சார்பாக நடைபெற்ற தேசியக் கொடி அணிவகுப்பு பேரணி. இவ்அமுத விழா மேடையில் உரையாற்றும் தி.தி.தே. செயலாட்சித்தலைவர் திரு. ஏ.வி. தர்மா ரெட்டி ஐ.டி.இ.எஸ். அவர்கள். இவ்விழாவில் தி.தி.தே. ஜே.இ.ஒ திரு. வீ. வீரப்ரஹ்மம் ஐ.ஏ.எஸ். அவர்கள், ஜே.இ.ஒ (எச்.&இ.) திருமதி எஸ்.பார்கவி ஐ.ஏ.எஸ். அவர்கள் மற்றும் உயர் அதிகாரிகள் பங்குகொண்டனர்










# திருவேங்கடவனின் சீரிய அருள்



- திருமதி தி.கமலி கஜேந்திரன், ஆவடி.

ஏழெட்டு ஆண்டுகளுக்கு முன் நடந்த நிகழ்வு இது. அது டிசம்பர் மாதம். வீட்டிலிருந்து எல்லோரும் திருமலைக்குச் சென்றிருந்தோம். முதல் தரிசனம் கிடைத்தது. நெடும் வரிசையில் பொறுமையாக நின்று காத்திருந்து தரிசித்தோம். அங்கப் பிரதட்சணம் டிக்கெட் கிடைத்ததால் அதைச் செய்து முடித்து கண்ணாரப் புலர் விடியலில் ஸ்வாமியை கண்டு உவகை அடைந்தோம். காலை பத்து மணிக்கு மேல் மூன்றாவது முறை பார்க்க விரும்பி வரிசையில் வந்து பட்டியில் தங்கினோம்.

பட்டி சுமாராகத் திறக்கும் நேரம் அதிகாலை நான்கு மணி என்று எழுதியிருந்தது. அதிகாலை என்றால் டிசம்பர் பத்தாம் தேதி. அது என் பிறந்த நாள். எவ்விதத் திட்டமோ, தீர்மானமோ இல்லாமல் வந்தாலும், இந்த முறை பிறந்தநாள் அதுவுமாகத் திருமலையில் தங்கித் திருவேங்கடவனை வணங்கி அவரது அருளையும், ஆசிகளையும் பெறப் போகிறோமே என்று மனம் உள்ளூர மகிழ்ந்தது. ஒவ்வொரு பிறந்த நாளின் போதும், வீட்டருகில் உள்ள கோயிலுக்குச் சென்று, அர்ச்சனை செய்வதும், பத்து உணவுப் பொட்டலங்கள் வாங்கிப் பத்து பேருக்கு கொடுப்பதும் வழக்கமாக இருந்தது.

இந்த முறை திருப்பதியில் என்றவுடன் மகிழ்ச்சியாக இருந்தது. அன்று தரிசனம் முடித்து ஊருக்குத் திரும்பலாம் என்றனர் குடும்பத்தினர். எதிரில் இருந்த ஆனந்த நிலையத் தங்கக் கோபுரக் கலசத்தை பார்த்து, என்ன பெருமாளே! வந்து, தங்கி இரண்டு நாள் இரண்டு தரிசனம் கிடைத்தது. விடிந்தால் பிறந்தநாள். இந்த முறை இங்கே இருந்து உன்னை வழிபட ஆசைப்பட்டது தவறா? என்னை ஊருக்குத் திருப்பி அழைத்துச் சென்று விட்டால் நான் என்ன செய்ய முடியும்? என்று பெருமாளிடம் முறையிட்டேன். கண்களில் நீர் மல்கியது. துடைத்துக் கொண்டேன்.

அப்போதெல்லாம் ஒரு வழக்கம் இருந்தது. பட்டியினுள் குறிப்பிட்ட நேரம் வெளியே செல்ல டோக்கன் தரப்படும். அந்த டோக்கனைப் பெற்றவர்கள் வெளியே சென்று மீண்டும் தமது பட்டிக்கு டோக்கனைக் காட்டி உள்ளே வர முடியும். நானும் என் தங்கையும் அங்ஙனம் டோக்கன் பெற்று,



## மங்கள சுலோகங்கள்

நவநீர தஸங்காச க்ருதகலி கல்மஷநாச ।
நாராயண நாராயண நாராயண நாராயண
ஜய கோபாலஹரே ॥

**அழகிய கார்நிறத்தோனே! கலியினில் செய்த தீவினையை அழிப்பவனே! நாராயணனே! கோபால! ஹரி! (உனக்கு) வெற்றி!**

வராஹரையும், ஹயக்ரீவரையும் தரிசித்து விட்டு பட்டிக்குத் திரும்பினோம். எங்களது பட்டியைப் பார்த்தால் அங்கே யாருமே இல்லை. முன் கூட்டியே பட்டி திறக்கப்பட்டு, எல்லோரும் அனுப்பப் பட்டிருந்தனர். அப்போது பால் விநியோகிக்க பால் வண்டியுடன் கோயில் ஊழியர் வந்தார். என்ன செய்வ தென்று அவரிடம் கேட்டோம். அவர் சொன்னார்.

இவ்விரு பட்டிகளை ஆறரை மணிக்குத் திறப் பார்கள். அப்போது இவர்களுடன் சேர்ந்து சென்று நீங்கள் தரிசனம் செய்யுங்கள் என்றார். இந்த கேனில் பால் உள்ளது. இப்போது சேவார்த்திகள் யாரும் இங்கு வர வில்லை. அவர்கள் பணியை நீங்கள் விரும்பினால் ஏற்றுச் செய்யலாம் என்றார். பால் வழங்கும் பேறு கிடைத்தற்கரியது அல்லவா? நாங்கள் இருவர். அவர் என்று மூவர் கேனில் உள்ள பாலை மாற்றி, மாற்றி இரண்டு குவளையில் நிறைத்து அவர் தர, பேப்பர் கப்பை வரிசையாக டிரேயில் வைத்து, குவளையில் இருந்து பாலை ஒரு துளியும் சிந்தாமல் தங்கை கப்பில் நிரப்ப, நிரம்பிய கப்புகளை கைக்கு ஒன்றாக இரண்டு கைகளிலும் எடுத்து, கம்பிக்கு உட்புறம் வரிசையில் நிற்பவர்களுக்கு பத்திரமாகத் துளியும் சிந்தாமல், பதட்டமின்றி கொடுக்கும் பணியை நான் செய்தேன்.

ஊரில் இருந்தால் பத்து பேருக்கு உணவு பொட்டலங்களைத் தந்திருப்பேன். அவ்வளவுதான். இப்போதோ அத்தனை பேர்களுக்கு இறைவனது அருட் பிரசாதமாகப் பாலை வழங்க வைத்து என் விருப்பத்தை நிறைவேற்றிய இறைவனது கருணை தான் எவ்வளவு உயர்வானது. பின்னர் வரிசையில் சென்று, பிறந்தநாள் அதுவுமாகப் பெருமாளைக் கண் குளிரக் கண்டேன். அவரது அருட் பார்வையைப் பெற்றேன்.


என் பிறந்தநாள் திருப்பதியில் இங்ஙனம் திருவேங்கடவனின் இன்னருளால் மகிழ்வுடன் திகழ்ந்தது. திருமாலை வணங்கி, மன நிறைவுடன் வீடு திரும்பச் செய்த அவரது அருளை இப்போது நினைத்தாலும் நெஞ்சம் நெகிழ்கிறது.

## தியான சுலோகங்கள்

யோ ப்ராம்மணாஞ்ச வேதாஞ்ச
நித்ய மேவா அநு மந்யதே ।
ந ச த்ரோக்தா பரம் வாதே
தைத்ய பாகவதோ ஹி ஸ: ॥

வேத பண்டிதர்களையும், இதிஹாஸ புராணங்களையும் மதித்தும், அதன் படி நடப்பவன் உத்தமன் எனப்படுகிறான்!

**தொகுப்பு : திருநாங்கூர் உ.வே. ஸௌந்திரராஜபட்டர், புதுடில்லி.**



# முருகப்பெருமான் வேல் வாங்கிய திருத்தலம் (சிக்கல் சிங்காரவேலன்)

நெய்வாசல் நெடுஞ்செழியன்,
சிதம்பரம்,
94422 05862.

**ஆலயச் சிறப்பு :**

தான் செய்த சிறு பிழை காரணமாக சாபம் பெற்ற தேவலோகத்துப் பகவான் காமதேனு இத்தலத்திற்கு வந்து இங்குள்ள தீர்த்தத்தில் நீராடி இறைவனை தரிசித்து பாவத்தைப் போக்கிக் கொண்டது. காமதேனு நீராடும் சமயத்தில் அதன் பால் பெருகி குளம் முழுவதும் பாலாகி பின்னர் வெண்ணையாக மாறியது. அது சமயம் அங்கு தங்கி பூஜை செய்து கொண்டிருந்த வசிஷ்ட முனிவர் அந்த வெண்ணெயை எடுத்து சிவலிங்க பிரதிஷ்டை செய்து சிவபூஜை செய்தார். பூஜையை முடித்தபின் சிவலிங்கத்தை வேறு இடத்தில் மாற்றி வைக்க எண்ணி, கைகளால் எடுக்க முயன்றபோது, அது இயலாமல் அந்த வெண்ணெய் லிங்கம் உருக்குலைந்து கையில் சிக்கிக் கொண்டது. அதன் காரணமாக சிக்கல் என்ற பெயர் பெற்றது. இவ்வாலயம் முசுகுந்த சக்கரவர்த்தியால் கட்டப் பட்டது. பின்னர் கோச்செங்கட் சோழனால் மாடக் கோயிலாக மாற்றம் செய்யப்பட்டது. அரண் அரியுடன் முருகன், அனுமன் என நால்வரும் அருகருகே இருந்து அருள்பாலித்து சுவாமி புறப்பாட்டின் போது பயன் படுத்தப்படும் வாகனங்களில் வேறு எந்த கோயில்களிலும் இல்லாத விதமாக தங்க வாகனங்களைக் கொண்டிருப்பது போன்ற சிறப்புக்களைக் கொண்டது.

திருமுருகத் திருத்தலம் காமதேனுவுக்கு கருணைக்காட்டிய ஈசனின் பெருமைக்கூறும் இவ்வால யம் 64 சக்தி பீடங்களில் ஒன்றாகவும், இவர்களின் திருக் குமாரர் முருகப்பெருமான் சூரபத்மனை அழிக்க கந்த சஷ்டி திருநாளில் முதல் நாள் தன் தாயார் பார்வதி தேவியிடம் சிங்காரவேலவராகத் தோன்றி வேல் வாங்கிய நிகழ்வு நடைபெற்ற திருத்தலமாகவும் விளங்குவதுடன் கட்டு மலையில் தந்தைக்கு அருகில் வள்ளி தெய்வானை சூழ தம்பதி சமேதராய் இருந்து அருள் பாலிப்பதால் முருகனின் ஏழாவது படைவீடு என்றும் போற்றப்படுகிறது. எட்டக்குடி, எண் கண், சிக்கல் ஆகிய மூன்று தலங்களில் விளங்கும் முருகப் பெருமான் ஒரே அமைப்புடைய மூர்த்திகளாக இருப் பதால் இவைகள் ஒரே சிற்பியால் வடிக்கப்பட்டது என்பர்.

**கல்வெட்டுச் செய்திகள்**

இவ்வாலயத்தில் பாண்டியர் மற்றும் விஜய நகர காலத்திய ஏழு கல்வெட்டுகள் இடம் பெற்றுள்ளன. அவைகள் முறையே தமிழக அரசால் படியெடுக்கப் பட்டு பாதுகாக்கப்படுகின்றன. அனைத்து கல்வெட்டுகளிலும் கோயிலுக்கு தானமளிக்கப்பட்ட செய்திகள் தமிழ் மற்றும் கிரந்த மொழிகளில் இடம் பெற்றுள்ளன.



## ஆலய அமைப்பும் தரிசன முறையும்

இவ்வாலயத்தில் அரனும் வடக்குப் பிரகாரத்தில் அரியும் இருந்து அருள்பாலிக்கின்றனர். அதனால் சிவனுக்கும் மாலுக்கும் தனித்தனி ராஜகோபுரங்கள் எழுப்பப் பட்டுள்ளன. இரண்டு ராஜ கோபுரங்களுக்கும் முன்னால் முகப்பில் மிகுந்த சிற்ப வேலைப்பாடுகளும், உட்புறம் இரும்புத் தாங்கு தூண்களைக் கொண்ட காரனேஷன்ஹால் என்னும் பெரிய கல்யாண மண்டபம் இடம் பெற்றுள்ளது. இதற்கு பின்னால் தென் புறத்தில் 80 அடி உயரமும் 7 நிலைகள் கொண்ட சிவாலயத்திற்கான இராஜ கோபுரமும், வடபுறத்தில் 40 அடி உயரமும் 3 நிலைகள் கொண்ட பெருமாள் ஆலய இராஜ கோபுரமும் இடம் பெற்றுள்ளன. இவைகளைத் தவிர தெற்கு புறத்தில் அம்பாள் சன்னதிக்கு எதிரில் மூன்று நிலை கோபுரமும், மேற்கு மற்றும் வடக்கு புறத்தில் நுழைந்தவுடன் முகமண்டபமும் அதனைத் தொடர்ந்து கார்த்திகை மண்டபம் எனப்படும் வசந்த மண்டபமும் அமைந்துள்ளது.

அடுத்ததாக கொடிமரமான துவஜஸ்தம்பமும், தொடர்ந்து கோயில் மையத்தில் கட்டு மலை கோயிலும் உள்ளது. கார்த்திகை மண்டபத்தில் இருந்து கட்டு மலைக்குச் செல்ல பக்க வாட்டில் படிக்கட்டுகள் அமைக்கப்பட்டுள்ளன. படிக்குப் பக்கத்திலுள்ள சுந்தரகணபதியையும் முருகப் பெருமானையும் தரிசித்த பிறகே தியாகராஜர் சன்னதி உள்ளது. இங்குள்ள மரகத லிங்கம் மிகவும் சிறப்பு வாய்ந்தது. அடுத்து வெண்ணெய்ப் பிரான் இருக்கும் கருவறையும் அதையடுத்து நடராஜர் சபையும், வள்ளி, தெய்வானையுடன் நின்ற திருக்கோலத்தில் தெற்கு நோக்கியவாறு காட்சி தரும் சிங்காரவேலர் சன்னதியும் அமைந்துள்ளது. ஐப்பசி மாத விழாவில் வியர்வை சிந்தும் வேலவர் இவர்தான். இவர்களை வழிபட்டு கட்டு மலையிலிருந்து மீண்டும் கீழே இறங்கி கார்த்திகை மண்டபத்திற்கு வர, கீழ்பக்கம் இறைவி வேல் நெடுங்கண்ணி தென் முகம் பார்த்தவாறு அருள் புரிகிறார். சூரபத்மனை அழிக்க வேல் கொடுத்த அன்னையின் சன்னதி விதானத்தில் அன்னை முருகனுக்கு வேல் தரும் அற்புத காட்சி சிற்பமாக வடிக்கப்பெற்றுள்ளது.

## கோலவாமன பெருமாள்

இரண்டாம் பிரகாரத்தின் வடக்குச் சுற்றில் கோல வாமனப் பெருமாள் கோயில் அமைந்துள்ளது. இத்தல பெருமாள் "கோலவாமனப் பெருமாள்" என்ற திருநாமத்துடன் தனி சன்னதியில் அருள்பாலிக்கிறார். ஸ்ரீதேவி பூதேவி சகிதம் நின்ற திருக்கோலத்தில் பெருமாள் காட்சி தருவது கண்கொள்ளா காட்சியாக இருக்கிறது. அவருக்கு எதிரில் வரத ஆஞ்சநேயரும் பின்புறத்தில் தனி சன்னதியில் தாயாரும் இருந்து அருள்பாலிக்கின்றனர்.

## உற்சவங்களும் திருவிழாக்களும்

சித்திரை மாதத்தில் பிரம்மோத்ஸவம் நடத்தப்பெறுகிறது. சிங்காரவேலவருக்கு பிரதி மாதம் கார்த்திகை நட்சத்திரத்திலும், சஷ்டி நாட்களிலும் சிறப்பு பூஜைகள் நடைபெறுகின்றன. ஐப்பசி மாதத்தில் கந்த சஷ்டி விழாவும், கார்த்திகை பெருவிழாவும் நடைபெறுகின்றது. ஆண்டுதோறும் ஐப்பசி மாதம் வேல் வாங்கும் விழாவில் சூரபத்மனை அழிப்பதற்காக தன் தாயிடம் வேல் வாங்கி சிங்காரவேலர் தன் கோயிலில் வந்து அமர்ந்த பின்னரும், வேலின் வீரியம் தாங்காமல் வியர்த்துக் கொட்டும். பட்டுத்துணியால் துடைக்கத் துடைக்க முத்து முத்தாக வியர்வை துளிர்த்துக் கொண்டே இருக்கும். புராண காலத்தில் நிகழ்ந்த இந்த அற்புதம் இன்றளவும் கந்தர்சஷ்டியின் போது தொடர்வது ஆச்சரியத்தை அளிக்கிறது. சிக்கலில் வேல் வாங்கி





செந்தூரில் சம்ஹாரம் என்பது பழமொழி. இத்தலத்தில் கோயில் கொண்டுள்ள அம்பாள் வேல்நெடுங் கண்ணியிடம் வேல் வாங்கி திருச்செந்தூரில் சூரபத்மனை முருகப் பெருமான் சம்ஹாரம் செய்தார்.

### பிரார்த்தனையும் நேர்த்திக்கடனும்

சிக்கல்கள் தீர இத்தல இறைவனிடம் பிரார்த்தனை செய்து கொள்கின்றனர். பிரார்த்தனை நிறைவேறியதும் இறைவன் வெண்ணெய்நாதருக்கு அமாவாசை மற்றும் பௌர்ணமி நாட்களில் உச்சிக்கால பூஜையின் போது வெண்ணெய் சாற்றி அர்ச்சனை செய்து வழிபடுகின்றனர். எதிரிகள் தொந்தரவு விலகி நலம் விளைய வேண்டி தேவர்கள், சூரபத்மனிடமிருந்து தங்களை காக்க முருகப் பெருமானுக்கு "திரி சதை" செய்து வேண்டிக் கொள்கின்றனர். இதனால் முருகப்பெருமான் சூரனை அழித்து தேவர்களை காத்தார். அதுபோல எதிரிகளின் இடர்களில் இருந்து மீள விரும்புவோர் அம்மன் தன் சக்தியை வேலாக வழங்கிய அந்த சிங்கார வேலவரிடம் முறையிட்டு பிரார்த்தனை நிறைவேறியதும் "சத்ரு சம்ஹார திரி சதை" அர்ச்சனை செய்து வழிபடுகின்றனர்.

முருகனுக்குரிய முகங்கள் ஆறு. அவர் எழுந்தருளிய படைவீடுகள் ஆறு. அவருக்கு பால் புகட்டி காப்பாற்றிய கார்த்திகைப் பெண்கள் அறுவர். முருகனுக்கு மந்திர எழுத்துக்கள் ஆறு. அவர் சூரனை சம்ஹாரம் செய்தது ஆறாவது நாள். இத்தனை சிறப்பு மிக்க சிங்கார வேலவரை விரதமிருந்து வழிபட அனைத்து நலன்களையும் பெறலாம்.

### அமைவிடம்

நாள்தோறும் சிவனுக்கு ஆறு கால பூஜையும் மாலுக்கு ஐந்து கால பூஜையும் நடைபெறும். இவ்வாலயம் நாகப்பட்டிணம் மாவட்டம் நாகை–திருவாரூர் பேருந்து மார்க்கத்தில் அமைந்துள்ளது. ஆலய திறப்பு நேரம் காலை மணி 10 முதல் 12.30 மணி, மாலை 4.00 மணி முதல் இரவு 9.30 வரை. முகவரி அருள்மிகு நவநீதேஸ்வரர் திருக்கோயில், சிக்கல் – 611 108., நாகப்பட்டணம் மாவட்டம், போன் – 04365–245 452,245 350.

## வைணவ குறுக்கெழுத்துப்புதிர் 75க்கான விடைகள்

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 தி | ரு | வ | ண் | வ | ண் | டூ | ர் | | ணு | | 2 தி |
| ர் | லூ | ல் | ந | ட | ண் | க | ர | 3 அ | ஷ் | | ரே |
| ம் | | | ர் | ர | த் | ரு | ல | கா | வி | 4 க | தா |
| க | 5 மூ | ன் | ற | டி | நி | ல | ம் | | கா | | யு |
| ட | | சி | 6 கோ | வ | ர் | த் | த | ன | 7 ம | லை | க |
| ண் | 8 நீ | ரீ | | | ம் | | ஜா | | ரு | 9 கு | ம் |
| தா | ர் | 10 ம | ம் | 11 சி | ர | 12 ந | ரி | த் | லா | ட | 13 பா |
| ந் | ளூ | ம் | ர | ந் | தா | ல் | 14 பா | | | ண் | தி |
| டு | 15 பே | த | 16 கூ | து | வ | லூ | | | | கு | ப |
| நெ | | த் | | ந் | மா | ர் | | | | 17 வை | ப் |
| ரு | | 18 ந | | 19 ஜ | 20 ரா | மா | னு | ஜ | ர் | | ரு |
| 21 தி | ம் | க | ங் | ர | 22 ஸ்ரீ | | | 23 அ | யோ | த் | 24 தி |

**புராண வரலாறு :**

ஆற்காட்டைத் தலைநகராகக் கொண்டு அரசாண்ட நவாப், படையெடுத்து இங்கு வந்து, உத்ஸவர் தங்கத்தால் ஆன விக்ரஹம் என நினைத்து எடுத்துச் சென்றான். பக்தர்கள் வேறு ஒரு அர்ச்சா விக்ரஹத்தை வடிவமைத்து வணங்கி வந்தாலும், "ஆழாதி" என்கிற தீவிர பக்தர், எம்பெருமானைத் தரிசிக்க இயலாத நிலையில் உண்ணாது, உறங்காது வாட, எம்பெருமான், கனவான உறக்கக் கலக்கத்தில் இவர் முன்பு தோன்றி, பெரும் பொருளை நவாப்பிடம் கொடுத்து, தம்மைக் கேட்குமாறு சொன்னான்.

அங்ஙனமே "ஆழாதி" பலரிடத்தும் சென்று பொருள் யாசித்து, யாவற்றையும் நவாப்பிடம் கொடுத்து எம்பெருமானைத் திருவாட்டாற்றில் ஐப்பசித் திருவோணத்தில் திருமஞ்சனம் செய்து, பிறகு வேறு இடத்துக்கு எழுந்தருளச் செய்ய முயற்சிக்க, பகவான் அந்த இடத்தை விட்டு அசையாது இருந்ததாகவும், பிரம்மோத்ஸவம் நடத்துமாறு கட்டளை இட்டதாகவும், அப்படியே நடத்தியவுடன் எம்பெருமான் இயல்பான நிலைக்கு வந்ததாகவும் சொல்வர்.

இந்த எம்பெருமானின் அநுக்ரஹ விசேஷங்களைப் பல்லாயிரம் பக்தர்களிடம் கேள்வியுற்ற ஆற்காடு நவாப், பொருளுக்காக அவரை விற்றதற்காக வெட்கப்பட்டு, அந்தப் பொருளையே செலவழித்து எம்பெருமானுக்குப் பல கைங்கர்யங்கள் செய்தானாம். பத்து நாள் உத்ஸவ முடிவில் தீர்த்தவாரி அன்று செய்யும் பூஜைக்கு, இது அல்லாவுக்குச் செய்யும் பூஜை என்பதாகச் சொல்லி "திருவான பூஜை" என்று பெயரிட்டானாம்.

இத்தலத்தைப் பற்றி சூதபுராணிகர் ரிஷிகளுக்குச் சொல்லியிருக்கிறார். திருவனந்தபுரம் அருகே "பொன்பரணை" என்கிற இடத்தில், பிரம்மா ஒரு யாகம் செய்ததாகவும், பகவான் தரிசனம் கொடுத்து, பிரம்மா வேண்டுகோளின்படி, தேவர்களுக்குச் சொல்லொணாத் துன்பங்களைக் கொடுத்த "கேசி" என்கிற அரக்கனை தானே வலிய அவனிடம் சென்று சண்டையிட்டு, அவனைக் கீழே தள்ளி, அவன் மேலே பள்ளி கொண்டதாகவும், அப்போது அரக்கனின் மனைவி "ஆசூரி" கங்கை நதியை வேண்ட கங்கையும், தாமிரவருணியும் சேர்ந்து பெருக்கெடுத்து கேசியை விடுவிக்கவர, பகவான் பள்ளிகொண்ட இடத்தை மிகவும் உயரமான மேடாக உயர்த்தியவுடன், கங்கையும், தாமிரவருணியும் அருகில் கூட வர இயலாமல் பகவானின் சக்தியை உணர்ந்து, இரண்டு நதிகளாகப் பிரிந்து பள்ளிகொண்ட பகவானின் இரு புறத்திலும் மாலைசாத்தினாற்போல் வட்டமிட்டுச் சென்றதாகவும் அதனால் இது "திருவட்டாறு" என்றும் சொல்வர்.

# திருவாட்டாறு

70

*– உருப்பட்டூர் சௌந்தரராஜன், சென்னை.*





**குறிப்பு :**

**நாகர்கோவில் திருவனந்தபுரம் சாலையில் தொடுவெட்டி என்கிற ஊரிலிருந்து 10 கி.மீ. கன்யாகுமரி-திருவனந்தபுரம் ரயில்பாதையில் அமைந்து உள்ளது.**

இரு நதிகளின் வேண்டுகோளின்படி வருடாவருடம் "ஆராட்டு" என்கிற உத்ஸவம் நடைபெறுகிறது.

தேவர்கள் பகவானை வேண்ட, பகவான் ஆதிசேஷனுக்குத் தன்னை சுமக்கும் பேறுடன் கேசியையும் எங்கும் செல்லவிடாமல் சுற்றி வளைக்கும் கடமையையும் கொடுத்தானாம். கேசி என்கிற அரக்கனின் ரத்தம் கீழே சிந்தினால், அங்கு இன்னொரு கேசி தோன்றுவான் என்கிற வரம் பெற்று இருந்ததால் ஆதிசேஷனின் வளைப்பில், ரத்தம் கீழே சிந்தாமல் கேசியை வென்றார். அதனால் இந்த எம்பெருமான் "ஆதி கேசவன்" ஆனார் என்பர். திருவனந்தபுரம் தோன்றுவதற்கு முன்பாகவே தோன்றிய ஊராதலால் ஆதி அனந்தஸ்தானம் என்றும் அழைப்பர். ஆதி அனந்தபுரமும் இதுவே. இங்கும் சயன திருக்கோலம். மூன்று வாசல்கள் வழியேதான் எம்பெருமானை திருவனந்தபுரத்தைப் போலச் சேவிக்க இயலும்.

இன்னொரு விவரமும் உள்ளது. "உமையம்மை ராணி" அரசாண்ட காலம். அப்போது முகலாயர்கள் இங்கு படையெடுத்த போது ராணி, "கோட்டயராஜா" "கேரளவர்மா"வைத் துணைக்கு அழைக்க, அவ்வரசனும் பெரும்படையுடன் இந்தத் தலத்துக்கு வந்தபோது, முகலாயரின் படையைக் கண்டு பயந்து, இந்த எம்பெருமானை "படைசங்கீர்த்தனம்" என்கிற தலைப்பில் மனமுருகப் பல பாடல்கள் பாடி, பகவானின் அருளுடன், வீரம் பெருகி முகலாயப் படையை விரட்டினான் என்றும், இப்போதும் மாலையில் பகவானின் ஆராதனத்தில் இப்பாடல்கள் பாடப்படுவதாகச் சொல்வர்.

**சிறப்புகள் :**

எம்பெருமானின் சயன திருக்கோலம். திருவனந்தபுரத்தை விடச் சிறப்பானது. தினமும் மாலை வேளையில் சூரிய கிரணங்கள் எம்பெருமானின் திருமேனியில் படியும்பாங்கு பரவசமூட்டுவது. அயோத்தி மன்னருக்கு அளித்த கோயில், விபீஷணனுடன் போகாமல் எப்படி காவிரி, கொள்ளிடம் இரு நதிகளுக்கு இடையே கோயில் கொண்டதோ, அப்படியே இங்கும், ஒரே நதியாக ஓடி

**ஸ்ரீ கி ரு ஷ் ண ர்**

- ஸ்ரீகிருஷ்ணர் பிறந்த திதி (அஷ்டமி) எட்டு என்பதே உயர்வு.
- ஸ்ரீகிருஷ்ணரின் பட்ட மகிஷிகள் எட்டு. 1) ருக்மிணி, 2) சத்யபாமா, 3) காளிந்தி, 4) பத்ரா, 5) லக்ஷ்ணா, 6) மித்திரவிருந்தா, 7) ஜாம்பவதி, 8) நாகநாத்ஜி என்று எட்டு பேர்.
- ஸ்ரீகிருஷ்ணர் வெவ்வேறு வடிவங்களில் எழுந்தருளியிருக்கும் தலங்கள் எட்டு. அவை 1) பாங்கே பிஹாரி, 2) துவாரகாதீசம் (துவாரகை), 3) ஜகன்நாதர் (பூரி), 4) சைதன்ய மகாபிரபு (மாயாபூர் மேற்கு வங்காளம்) 5) ஸ்ரீநாத்ஜீ (நாத்துவாரா, ராஜஸ்தான்), 6) ஸ்ரீஹரி விட்டலர் (பண்டரிபுரம்), 7) ஸ்ரீவெங்கடேசப் பெருமாள் (திருப்பதி), 8) ரணசோட்ஜி (டாகோர் குஜராத்).

திரு. எம். அசோக்ராஜா, திருச்சி,

வரும் ஆறு, இவருக்கு மாலை சூடுவது போல் ஓடி, இரண்டாகப் பிரிகிறது. இங்கு விரும்பி சயனத்திருக் கோலம் கொண்ட எம்பெருமான் இவர்.

| | | |
|---|---|---|
| பெருமாள் | : | ஆதிகேசவன் (மேற்கு நோக்கிய சயனத் திருக்கோலம்) |
| தாயார் | : | மரகதவல்லி, பத்மினி தேவி இரண்டு திருநாமங்கள். |
| விமாநம் | : | அஷ்டாக்ஷர விமாநம், அஷ்டாங்க விமாநம். |
| தீர்த்தம் | : | வட்டாறு, ராம தீர்த்தம், கடல்வாய் தீர்த்தம். |
| ப்ரத்யக்ஷம் | : | பரசுராமன், பூஜாக்ரமம். |
| ஆகமம் | : | நம்பூதிரிகளின் பூஜாக்ரமம். |
| மங்களாசாஸனம் | : | நம்மாழ்வார். |

**விசேஷம் :**

இது தமிழ் நாட்டுப் பகுதியில் உள்ளது. ஆனால் சேரநாட்டுத் திருப்பதிகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

நம்மாழ்வார் அருளிய திருவிருத்தத்தில் "பொய்ந் நின்ற ஞானமும்" என்கிற பாசுரம் வரை, நம்மாழ்வார் அநுபவித்து பாசுரமிட்டுள்ளது தனி விசேஷம். இத்திவ்ய தேசத்தில் பகவான், தன்னுடைய சுதந்திரத் தன்மையைக் காட்டாமல், ஆழ்வாரின் விருப்பமே தன் விருப்பமாக ஏற்று, ஆழ்வாரைப் பின்பற்றினாராம். ஈட்டில் நம்பிள்ளை "ஸர்வ சுதந்திரனாய் இருக்கும் தன்னுடைய நிலையைக் காட்டாமல் அடியார்களின் விருப்பத்தை ஒட்டிச் செல்பவராக விளங்குகிறான்" என்கிறார்.

இவர் இசைவு பார்த்து இருந்த பிரான் என்கிறார் ஸ்ரீமணவாளமாமுனிகள். இதுவே "ஆச்ரித பாரதந்த்ரியம்" அடியார்க்கு ஆட்பட்டு நிற்கும் கல்யாண குணம்.

**த்யானச்லோகம் :**

*புண்யே ஸாகர நிம் நகாக்ய நகரே ஸ்ரீபத்மிநீ கேசவ:*
*ப்ரத்யக் திக் வதநோ புஜங்க சயந: சந்த்ரபரஸந்நோ ஹரி: ।*
*திவ்யாஷ்டாக்ஷர ஸம்ஜ்ஞயா விலஸிதே ஸ்ரீவ்யோம யாநோத்தமே,*
*குர்வாரகாரதயா முநிப்ரப்ருதிபிர் த்வாரத்ரயே ஸேவ்யதே॥*

**பாசுரம் :**

*"அருள்பெறுவார் அடியார்தம் அடியனேற்கு, ஆழியான்*
*அருள்தருவான் அமைகின்றான் அதுநமது விதிவகையே,*
*இருள்தருமா ஞாலத்துள் இனிப்பிறவியான் வேண்டேன்,*
*மருளொழிநீ மடநெஞ்சே! வாட்டாற்றான் அடிவணங்கே"*

– நம்மாழ்வார்

*"மாலைமுடி நீத்து, மலர்ப்பொன் அடிநோவப்*
*பாலைவனம் நீ புகுந்தாய் பண்டு என்று - சாலவும் நான்*
*கேட்டால் துயிலேன் நான், கேசவனே! பாம்பணைமேல்*
*வாட்டாற்றுக் கண் துயில் கொள்வாய்."*

– பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்

**நாமாக்கள்**

651. *ஓம் ஸுரஜநேஸ்வர: நம:*

சுரஜனங்களின் ஈஸ்வரனே.

*ஓம் ஸுராதுலாயை நம:*

தேவர்களுக்குள்ளும் தனக்கு ஒப்பார் இல்லாதவளே.

652. ஓம் த்ரிலோகாத்மா நம:

மூவுலகும் செல்பவனே.

ஓம் ஸக்ருத்விபாதாயை நம:

மோக்ஷத்திற்கு விடியற்காலை போன்று இருப்பவளே.

653. ஓம் த்ரிலோகேஸ: நம:

மூவுலகுக்கும் ஈஸ்வரனே.

ஓம் ஸர்வார்த்தி ஸமுத்ர பரிசோஷிண்யை நம:

எல்லாவித துன்பக்கடலையும் முழுவதும் வற்றச் செய்பவளே.

655. ஓம் கேஸவ: நம:

கேசி என்கிற அசுரனை அழித்தவனே.

ஓம் பில்வப்ரியாயை நம:

பில்வத்தில் பிரியமுள்ளவளே.

655. ஓம் கேஸிஹா: நம:

ப்ரம்ம ருத்ரர்கட்கும் ஈசனே.

ஓம் அவந்யை நம:

ரக்ஷிப்பவளே.

656. ஓம் ஹரி: நம:

துக்கங்களை அழிப்பவனே.

ஓம் சக்ர ஹ்ருதயாயை நம:

சேதனர்களின் மனசைச்சக்ரமாகப்பெற்றவளே. ஸ்ரீசக்ரத்தின் மத்தியில் வாசம் செய்பவளே.

657. ஓம் காமதேவ: நம:

விருப்பங்களை பூர்த்தி செய்பவனே.

ஓம் கம்புதீர்த்தகாயை நம:

சங்கு தீர்த்தத்தில் ஸாந்நித்யம் கொள்பவளே.

658. ஓம் காமபால: நம:

கொடுத்தவைகளைக் காப்பாற்றுபவனே.

ஓம் ஸர்வமந்த்ராத்மிகாயை நம:

எல்லா மந்திரங்களிலும் அவைகளுக்கு சக்தி அளிக்க அவைகளில் வ்யாபிப்பவளே.

659. ஓம் காமீ: நம:

கொடுக்கக்கூடிய பொருள்களை நிரம்பப் பெற்றவனே.

ஓம் வித்யுதே நம:

அறிவைத்தரவல்ல ஒளி உள்ளவளே.

660. ஓம் காந்த: நம:

மிக மிக அழகானவனே.

ஓம் ஸுவர்ணாயை நம:

நல்ல மந்திர அக்ஷரங்களை தனக்கு வாஸமாக உடையவளே.

ஸ்ரீமதே மரகத வல்லீநாயிகா ஸமதே ஸ்ரீஆதிகேசவ பரப்ரஹ்மணே நம:

திவ்ய தேச வைபவம் வளரும்...

## கடைபிடிப்போம்

- நல்ல செயலை உடனடியாக செய்து முடி. அது பலன் தரும்.
- தீய செயலைத் தள்ளிப்போடு தள்ளிப் போடுவதால் அந்த தீய செயல் நடைபெறாமல் இருக்க வாய்ப்புண்டு.
- உன் சாரதியிடமோ, வாயிற்காப்போனிடமோ, சகோதரனிடமோ பகை கொள்ளாதே உடனிருந்தே கொல்வார்கள்.
- தொடர்ந்து நீ வெற்றி வாகை சூடினாலும் எப்போதும் வெல்வோம் என்று எண்ணாதே.
- உன் குற்றங்களை சுட்டிக் காட்டும் நண்பனை நம்பு.
- எதிரியை எப்போதும் எளியவன் என எடைபோட்டு விடாதே.
- வானின் நட்சத்திரங்களை வளைக்க முடியும் என்று நம்பாதே. அவைநம் வழிகாட்டிகள்.
- பொறுமையை விட மேலான தவமுமில்லை.
- திருப்தியை விட மேலான இன்பமுமில்லை.
- இரக்கத்தை விட உயர்ந்த அறமுமில்லை.
- மன்னித்தலை விட ஆற்றல் மிக்க ஆயுதமில்லை.

திரு. எம். அசோக்ராஜா,
திருச்சி,



தொடர்

## பெரிய நம்பிகள் வாழித்திருநாமம் உரை...

**ஸ்ரீ உ.வே. டாக்டர் மாடபூசி வரதராஜன் ஸ்வாமி, சென்னை, 9841884972**

ஆளவந்தார் அவதரித்து 21 வருடங்களுக்குப் பின்னர் 997–998 இல் ஹேவிளம்பி வருடம், மார்கழி கேட்டையில் கோயில் என்னும் திருவரங்கத்தில் அவதரித்தவர் பெரிய நம்பிகள் ஆவர். குடி சாந்தனூர். இந்த ஆசார்யர் குமுதர் என்னும் நித்யஸூரி அம்சமாவர்.

இவர் இராமாநுசருக்கு திருவிலச்சினை செய்த முக்கிய ஆசார்யராய், ஆளவந்தாருடைய சீடர்களில் பெருமை பெற்றவ ராதலால் பேரறிவாளரான இவர் பெரிய நம்பி என்று அழைக்கப்பட்டார். மஹாபூர்ணர், பூர்ணாசார்யர் மற்றும் பராங்குச தாஸர் என்ற பெயர்களும் உண்டு.

*அம்புவியில் பதின்மர் ஆய்ந்துரைப்போன் வாழியே*
*ஆளவந்தார் தாளிணையை அடைந்து உய்ந்தோன் வாழியே*
*உம்பர்தொழும் அரங்கேசர்க்கு உகப்புடையோன் வாழியே*
*ஓங்கு தனுக்கேட்டைதனில் உதித்த பிரான் வாழியே*
*வம்பவிழ்தார் வரதருரை வாழி செய்தான் வாழியே*
*மாறனேரி நம்பிக்கு வாழ்வளித்தான் வாழியே*
*எம்பெருமானார் முனிவர்க்கு இதமுரைத்தான் வாழியே*
*எழில் பெரியநம்பி சரண் இனிதூழி வாழியே.*

**பதவுரை :**

அம்புவியில் – அழகிய பூமியில், பதின்மர் – பொய்கை முதலான பத்து ஆழ்வார்கள் அருளிய, கலை – திவ்ய ப்ரபந்தத்தை, ஆய்ந்து உரைப்போன் – ஆராய்ந்து உரைத்தவரான பெரிய நம்பிகள், வாழியே – வாழ வேண்டும்;

ஆளவந்தார் – தம் ஆசார்யரான ஆளவந்தாருடைய, தாளிணை – இரண்டு திருவடிகளை, அடைந்து – பற்றி, உய்ந்தோன் – உய்ந்தவர்; உம்பர் தொழும் – நித்யஸூரிகள் வணங்கும், அரங்கேசர்க்கு – திருவரங்கத்திலுள்ள ஈச்வரனான ரங்கநாதனுக்கு, உகப்புடையோன் – உகப்பை உடையவர்; ஓங்கு – உயர்த்தியுடைய, தனுக் கேட்டைதனில் – தனுர் மாதமான மார்கழி மாதம் கேட்டை நக்ஷத்திரத்தில், உதித்த – தோன்றிய, பிரான் – உதவியாளர்; வம்பவிழ்







– நறு மணம் வீசுகின்ற, தார் – மாலை அணிந்த, வரதர் – தேவப் பெருமாள், உரை – வார்த்தையை, வாழி செய் தான் – வாழும்படி செய்தவர்; மாறனேரி நம்பிக்கு – ஆளவந்தார் சீடரான மாறனேரி நம்பிக்கு, வாழ்வளித்தான் – ஈமச்சடங்கு செய்து, உய்வு பெறச் செய்தவர்; எம்பெருமானார் முனிவர்க்கு – இராமாநுசரான முனிவர்க்கு, இத முரைத்தான் – நல்வார்த்தை அருளினவர்; எழில் பெரிய நம்பி – அழகிய பெரிய நம்பியுடைய, சரண் – திருவடிகள், இனிதூழி – இனிமையாக ஊழிக்காலம் முழுவதும், வாழியே – வாழ வேண்டும்.

**சிறப்புரை**

*(அம்புவியில் பதின்மர் கலை ஆய்ந்துரைப்போன்)* அம்புவி – அழகிய பூமி. பூமிக்கு அழகாவது அணி கலனான ஆழ்வார்கள் பதின்மர் அவ தரித்ததாகும். பதின்மராவார் – திருவவதார முறை யில் மணவாள மாமுனிகள் உபதேசரத்ன மாலையில் அருளியபடி பொய்கையார், பூதத்தார், பேயார், திருமழிசைப் பிரான், நம்மாழ்வார், குலசேகராழ்வார், பெரியாழ்வார், தொண்டரடிப் பொடியாழ்வார், திருப்பாணாழ்வார், திருமங்கையாழ்வார் ஆவர்.

கலையாவது குற்றமற்ற பிரமாணமான வேதம். அதனை ஆய்ந்து தமிழிலே அளித்தவர்கள் ஆழ்வார்கள். அவற்றை ஆராய்ந்து சீடர்களுக்கு உரைத்தவர் பெரிய நம்பி உள்ளிட்ட ஸ்ரீமந்நாத முனிகள் தொடக்கமான ஆசார்யர்கள். ஆகையால் *''ஆய்ந்துரைப் போன்''* என்றபடி. அந்த வகையில் திருப் பாணாழ்வார் அருளிய அமல னாதிபிரான் என்னும் பிர பந்தத்தை அநுபவித்து *''ஆபாத சூடம்... முநிவாஹநம் தம்''* என்ற தனியனைப் பெரிய நம்பி அருளியது காண்க.

மேலும் பெரிய திருமொழி 3–7, 7–4, திருவிருத்தம் பாடல் 8, திருவாய் மொழி 3–5–7, 7–10–6 ஆகிய பாசுர வ்யாக்யானத்தில் பெரிய நம்பிகளின் நிர்வாகமும், ஐதீகமும் வந்தது காண லாம். திவ்ய ப்ரபந்தங்களான பதின்மர் கலை ரகசியத் ரயத்தின் ஸாரம் என்ற வகையில் *''துவயமந்திரமானது கற் புடைய பெண்ணுக்கு மங்களஸூத்ரம் போலே நமக்கு துவயம்''* (வார்த்தாமாலை – 736) என்று பெரிய நம்பிகள் அருளுவர்.

*(ஆளவந்தார் தாளிணையை அடைந்து உய்ந்தோன்)* – ஆளவந்தார் – ஸ்ரீமந்நாதமுனிகளின் திருப்பேரனாரான யமுனைத் துறைவரின் காரணப் பெயர். அதாவது ராஜசபையில் ராஜ புரோகிதனான ஆக்கியாழ்வானோடு வாதப்போர் செய்து ஆக்கியாழ்வான் வாயை அடக்குகையால் ஆளவந்தார் என்னும் திருநாமத்தை உடையவராய் நம் தர்சனத்தை ஆளவந்தார் என்பர். அந்த ஆளவந்தார் பெரிய பெருமாளை ஸேவித்துக் கொண்டு எழுந்தருளி இருந்த காலத்திலே அவர்

தாளிணையை அடைந்தவர்களில் பெரிய நம்பி முதல்வராவர்.

ஆளவந்தார் உடல்நிலை கொஞ்சம் தளர்ந்த சமயத்தில் பெரிய நம்பியும் மற்ற இரு சீடர்களும் அவரை தங்களுக்குத் தஞ்சமாக இருக்கும் ஒரு அர்த்தம் அருள வேண்டினர். ஆளவந்தாரும், ***''கோயிலாழ்வாரே உங்களுக்கு உயிர்நிலை''*** என்றார். இதனை உட்கொண்டு அவர்களும் அப்படியே இருந்ததைக் கொண்டு ***''அடைந்து உய்ந்தோன்''*** என்றவாறு. ஒரு சமயம் எம்பெருமானாரும் ஸ்ரீவைஷ்ணவர்களும் எழுந்தருளி இருந்தபோது பெரியநம்பிகள் தண்டனிட்டுக் கிடந்தார். உடனே எம்பெருமானார் ***''நம்மை இங்ஙனே செய்தருளினது என்?''*** என்று கேட்க, நம்பிகள் ***''ஆளவந்தாரும் சீடர்களும் எழுந்தருளினாப்போலே இருந்தது. அதனால் தண்டனிட்டேன்''*** என்று அருளினார்.

இதனால் நம்பிகளுக்கு ஆளவந்தாரிடம் உள்ள பக்தியைக் காணலாம். மேலும் ***''யாமுநாங்க்ரி ஸமாச்ரிதம்''*** என்று தனியனில் அருளியதற்கு ஏற்ப ஆளவந்தார் திருவடிகளைப் பற்றினவர் பெரிய நம்பி என்றபடி.

தொடரும்...



## ஸப்த கோ பிரதக்ஷிணை மந்திரம்



**கடந்த ஆண்டு செப்டம்பர் 11ஆம் தேதி அன்று திருப்பதியில் அலிபிரி பாதாள மண்டபம் அருகில் "ஸப்த கோ" பிரதக்ஷிணை மந்திரத்தை மாண்புமிகு ஆந்திர மாநில முதல்வர் திரு.ஒய்.எஸ். ஜகன்மோகன் ரெட்டி அவர்கள் திறந்து வைத்தார்.**
**திருமலை திருப்பதி தேவஸ்தானம் பசுக்களுக்கு முக்கியத்துவம் அளிப்பது அனைவரும் அறிந்ததே. "கோயிலுக்கு ஓர் கோமாதா" திட்டம் அதற்கு ஓர் சான்றாகும்.**





**ஏழு மலைகளின் அடையாளமாக ஏழு பசுக்கள் அவற்றின் கன்றுகள், வேணு கோபால ஸ்வாமி விக்ரஹம், "கோ" பூஜை, "கோ" தரிசனம் குறிப்பாக ஸ்ரீவேங்கடேஸ்வரா ஸப்த கோ பிரதக்ஷிணை மந்திரத்தில் நிறுவப்பட்டுள்ளன.**





**இந்த கோ பிரதக்ஷிணை மந்திரத்தில் தரிசித்தால் கிரஹ சாந்தி கிட்டும்.**
**பக்தர்கள் தாங்கள் தேர்ந்தெடுக்கும் பசுக்களின் எடைக்கேற்ப துலாபார சேவை மூலமாக பணம், உணவுப்பொருட்கள், மாட்டு தீவனங்கள் தானம் செய்ய வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.**





அலசுவோம்...... அறிவோம்.... ஆதிகாவிய நாயகர்களை...

# “தொண்டனுக்குத் தொண்டு செய்த சத்ருக்னன்”

–திரு. எஸ். ஸ்ரீதுரை, காஞ்சிபுரம்,
94881 39685

ஸ்ரீராமபிரானுடன் பிறந்த சகோதரர்களில் “தொண்டரடிப் பொடி” என்ற பட்டத்திற்கு மிகவும் பொருத்தமானவன் சத்ருக்னனே.

ஸ்ரீமத்ராமாயணத்தை இயற்றிய வால்மீகி முனிவரே சத்துருக்னனை மிகவும் உயர்த்தி, “பாவம் ஏதும் இல்லாதவன்” என்றும், புலன்களை வென்றவன் என்றும் கூறுகின்றார்.

*“கச்சதா மாதுல குலம் பரதேந ததாநக:*
*சத்ருக்னோ நித்யசத்ருக்ன:*
*நீத:ப்ரீதி புரஸ்க்ருத”*

என்ற அயோத்தியா காண்ட சுலோகம் பாகவதத் தொண்டின் பெருமையை உயர்த்திப் பேசுவதாக ஸ்ரீவைஷ்ணவப் பெரியோர்கள் கூறுவர்.

மிதிலா நகரில் சீதாராம கல்யாணம் முடிந்து அயோத்தி திரும்பிய பிறகு, ஸ்ரீராமனின் தம்பியாகிய பரதன் தன்னுடைய மாமன் யுதாஜித்தின் அழைப்பின் பேரில் கேகய நாட்டிற்குக் கிளம்பிச் சென்றான்.

அப்பொழுது பரதனுடன் கிளம்பிய சத்ருக்னனைப் பற்றிக் குறிப்பிடும் மேற்கண்ட சுலோகம் அவனுடைய பெருமை முழுவதையும் இரண்டே அடிகளில் விவரித்து விடுகின்றது.

ஸ்ரீராமபிரான் கௌசலைக்கும், பரதன் கைகேயிக்கும், லக்ஷ்மணன், சத்ருக்னன் இருவரும் சுமித்ரைக்கும் மகன்களாக அவதரித்ததை நாம் அறிவோம். இவர்களுள் லக்ஷ்மணன் ஸ்ரீராமபிரானின் தொண்டனாகவும், சத்ருக்னன் பரதாழ் வானின் தொண்டனாகவும் திகழ்ந்தனர்.


மன்னுபுகழ் கோசலை தன் மணிவயிற்றுக்கு நிகரான பெருமையைப் பெற்றது சுமித்ரையின் திருவயிறு. அதிலும், தொண்டனுக்குத் தொண்டனாக விளங்கிய சத்ருக்னனைப் பெற்றதால் சுமித்ரையின் புகழ் இமய மலை போன்று உயர்ந்து விளங்கியது.

லக்ஷ்மணன், சத்ருக்னன் இவ்விருவருள் சத்ருக்னனை மட்டும் “அநக:” அதாவது, “பாவம் அற்றவன்” என்று வால்மீகி ஏன் சிறப்பிக்க வேண்டும்? லக்ஷ்மணன் பகவானாகிய ஸ்ரீராமபிரானுக்குத் தொண்டு புரிந்து வந்தான். ஆனால், சத்ருக்னனோ, அந்த பகவானுக்கே தொண்டனாகிய பரதாழ்வானுக்குத் தொண்டு புரிந்து வந்தான்.

“தாயுரை கொண்டு தாதை உதவிய தரணி தன்னை தீவினை என்ன நீத்து” என்று குகன் கூறியது போல், கைகேயிக்கு தசரதர்



# வடுக நம்பி இயற்றிய ஸ்ரீயதிராஜ வைபவம்



*ஸம்ப$_4$ராஷிதச்சேதி$_3$ஹ பாட$_2$ப$_4$ங்க$_3$:*
*ஸ்யாதி$_3$த்யஸம்ப$_4$ராஷ்ய ஸ யாமுநார்ய: ।*
*ஸ்ரீரங்க$_3$மேவாப ஸசிஷ்யவர்கே$_3$ாராமாநுஜார்யச்ச*
*பபாட$_2$ பச்சாத் ॥*
**(16)**

**"இப்போது நாம் இராமாநுஜரோடு வார்த்தையாடினால், அவர் பாடம் படிப்பதற்கு இடையூறு ஏற்படும்" என்று கருதிய ஆளவந்தார், அவரோடு வார்த்தை சொல்லாமலே சிஷ்யவர்க்கங்களோடு கூட ஸ்ரீரங்கத்திற்கு எழுந்தருளி விட்டார். இராமாநுஜரும் யாதவரிடம் பாடம் படித்து வந்தார்.**

– "ஸுதர்சனம்" ஆசிரியர் இயற்றியது

அளித்த வரத்தால் கிடைத்த கோசல ராஜ்ஜியத்தின் அரச பதவியை ஏற்பதைப் பெரும்பாவமாகக் கருதி நிராகரித்தவன் பரதாழ்வான். அதுமட்டுமின்றி, ஸ்ரீராமனின் திருவடி நிலைகளாகிய பாதுகைகளையே சிம்மாசனத்தில் வைத்து, தன்னை அப்பாதுகைகளின் ஊழியனாகக் கருதி அரசாங்கத்தை நடத்தி வந்தான். அப்படிப்பட்ட பரதாழ்வானின் தொண்டனாக விளங்கிய காரணத்தால் சத்ருக்னனைப் "பாவமற்றவன்" (அநக:) என்று வால்மீகி முனிவர் கூறுகின்றார்.

மேலும், பரதன் கேகய நாட்டிலுள்ள தன் மாமன் யுதாஜித்தைப் பார்க்கச் சென்ற பொழுது, அவன்

**மணவாளர் ஆழ்வார் திருநகரியிலிருந்து ஸ்ரீரங்கம் எழுந்தருளி, துறவறம் மேற்கொண்டு, "ஸ்ரீமணவாளமாமுனிகள்" என்ற திருநாமத்துடன் விளங்கிய சமயம், தமக்குரிய பெருமை, தன் சீடருக்கும் கிட்ட வேண்டுமென்று, தம் ஆசனத்தில், பொன்னடிக்கால் ஜீயரை இருத்தி, அப்பாச்சியாரண்ணாவுக்கு பஞ்சஸம்ஸ்காரம் செய்யச் சொன்னார். பல ஆண்டுகள் கழித்து பொன்னடிக்கால் ஜீயர், வடதேச யாத்திரை செய்து விட்டு, ஸ்ரீரங்கம் வந்தபொழுது தம் ஆசாரியர், ஸ்ரீமணவாளமாமுனிகள் திருநாடு அலங்கரித்த செய்தி கேட்டு மிகவும் வருந்தி, ஸ்ரீசூர்ணபரிபாலனம், திருவத்யயனம் ஆகியன செய்தபோது, அங்குள்ள சிஷ்யர்கள், ஸ்ரீமணவாள மாமுனிகள் இட்ட கட்டளையாக அவருடைய உபதண்டம், கணையாழி மோதிரம், திருவடி நிலைகள் ஆகியவற்றைக் கொடுத்தனர். பொன்னடிக்கால் ஜீயரும் அவற்றைப் பெற்றுக் கொண்டு வானமாமலைக்கு எழுந்தருளினார். மேற்கண்ட மூன்றும் இன்றளவும் ஸ்ரீவானமாமலை ஜீயர்களிடம் இருந்து வருகின்றன. இங்ஙனம், தம் சீடரிடம் அளவற்ற அன்பு கொள்ள ஸ்ரீமணவாள மாமனிகளுக்கு, இராமாநுஜர் தம் சீடர்களான கூரத்தாழ்வான், முதலியாண்டான், எம்பார் ஆகியோரிடம் காட்டிய அன்பே வழிகாட்டியென்று கூறலாம்.**




**இல்லறத்தை நல்லறமாக நன்கு நடத்தியும், பகவத் கைங்கர்யத்திற்காகவே துறவறம் மேற்கொண்டவர் மணவாள மாமுனிகள். வைணவர்கள் மணவாள மாமுனிகளை "பெரிய ஜீயர்" என்றும் அழைப்பர். மாமுனிகள் கி.பி. 1425 முதல் 1443 வரை, 18 ஆண்டுகள் ஸ்ரீரங்கத்தில் வசித்து தரிசன நிர்வாகம் செய்தார். மணவாள மாமுனிகள், 73 ஆண்டுகள் அருட்பணி புரிந்து திருநாட்டிற்கு எழுந்தருளினார். ஸ்ரீரங்கத்தில், "தவராசன்" படுகையில், திருப்பள்ளிப் படுத்தப்பட்டுள்ளார் (திருவரசு) என்றும் கூறுவர்.**



# கண்ணன் கருத்துரை

*ந ப்ரஹ்ருஷ்யேத்ப்ரியம் ப்ராப்ய நோத்விஜேத்ப்ராப்ய சாப்ரியம் ।*
*ஸ்திரபுத்திரஸம்மூடோ ப்ரஹ்மவித்ப்ரஹ்மணி ஸ்தித:॥*

(5-20)

**நினைத்தது நிறைவேறியபோது பொங்கி மகிழ வேண்டா: நினைத்தது நிகழாதபோது நெஞ்சம் கலங்க வேண்டா. நிலையான பக்தியான புத்தியோடு, அறிவோடு, பற்றற்ற கர்மயோகத்தில் இருக்கின்ற பிரம்ம ஞானி எப்பொழுதும் அமைதியாக பரப்பிரம்ம நிலையில் இருப்பான்.**

தொகுப்பு:
பேராசிரியர் அமரர் பொன் சௌரிராஜன்,
திருப்பதி.



மேல் கொண்ட அன்பினால் சத்ருக்னன் இழுத்துச் செல்லப்பட்டதாகவும் கூறுகின்றார் வால்மீகி.

ஸ்ரீபெரியவாச்சான் பிள்ளை தம்முடைய வியாக்கியானம் ஒன்றில், "தன் எஜமானன் ஊருக்குக் கிளம்பும் பொழுது அவனுடைய உடமைகளும் கூடவே செல்வது போன்று, பரதனுடன் சத்ருக்னனும் கிளம்பிச் சென்றான்'' என்று சுவாரசியமாகக் கூறியுள்ளார்.

ஸ்ரீவைஷ்ணவர்களைப் பொறுத்தவரையில், "பகவத் பக்தியின் எல்லை நிலம் பாகவத பக்தி'' என்றே கூறுவர். பகவானுக்குச் செய்யும் தொண்டு எவ்வளவோ நல்ல பலன்களைக் கொடுக்கும் என்பது உண்மைதான்; ஆனால், பகவானின் பக்தராகிய ஒரு பாகவதருக்குச் செய்யும் தொண்டே அந்த பகவானின் திருவுள்ளத்திற்கு மிகவும் உகப்பான விஷயமாகும். பகவத் பக்தியினால் மோட்சம் சித்திக்காமல் போனாலும், பாகவதத் தொண்டின் மூலம் மோட்சம் சித்திக்கும் என்பதில் ஐயமில்லை.

இதற்கு உதாரணமாக ஒரு நிகழ்ச்சியைக் கூறுவர்.

பெருமாள்கோவில் எனப்படும் காஞ்சீபுரத்தில் எழுந்தருளியுள்ள ஸ்ரீவரதராஜப் பெருமாளுடைய திருமேனி குளிரும்படியாக விசிறி வீசும் "திருவால வட்டக் கைங்கர்யம்'' என்ற தொண்டினை ஒரு நாள் விடாமல் செய்தவர் திருக்கச்சிநம்பிகள். அவருடைய தொண்டினால் மனமுகந்த ஸ்ரீவரதராஜரும் அவருடன் ஏகாந்தத்தில் உரையாடுவது வழக்கம். இராமாநுஜரே தம்முடைய சந்தேகங்களுக்கான பதில்களைத் திருக்கச்சி நம்பிகள் மூலம் பெருமாளிடம் கேட்டறிந்தார்.

இத்தகைய பெருமை வாய்ந்த திருக்கச்சி நம்பிகள் ஒரு முறை பெருமாளை நோக்கி, "அடியேனுக்கு எப்பொழுது மோட்சம் கிடைக்கும்?'' என்று ஆவலுடன் கேட்க, "உனக்கு மோட்சம் கிடையாது'' என்று கூறிவிட்டார் பெருமாள்.

திகைத்துப் போன திருக்கச்சி நம்பிகள், "அடியேன் உமக்கு ஆலவட்டக் கைங்கர்யம் செய்கிறேனே?'' என்று கேட்க, "நீ எனக்கு விசிறுவதற்குப் பிரதிபலனாக நான் உன்னுடன் பேசுகிறேன். வேறு யாருடனாவது நான் நேரிடையாகப் பேசுவதில்லையே. ஆனால், உனக்கு மோட்சம் வேண்டும்

என்றால் நீ ஒரு பாகவதருக்குத் தொண்டு செய்தால் மட்டுமே சாத்தியம்!” என்று ஸ்ரீவரதராஜர் கூறி விட்டாராம். அதைத் தொடர்ந்து நம்பிகள் ஆளவந்தாருக்குச் சீடராகித் தொண்டுகள் பல புரிந்து மோட்சம் அடைந்ததாக ஸ்ரீவைஷ்ணவப் பெரியோர்கள் கூறுவர்.

இந்நிலையில், பெருமாளுக்கு விசிறிய திருக்கச்சி நம்பிகளை லக்ஷ்மணனுடன் ஒப்பிடலாம் என்றால், ஆளவந்தாருக்குத் தொண்டு புரிந்த திருக்கச்சி நம்பிகளை சத்ருக்னனுடன் ஒப்பிடலாம். இதன் காரணமாகவே சத்ருக்னனை வால்மீகி “பாவ மற்றவன் – அநக:” என்று அழைத்தது மிகவும் பொருள் பொதிந்த பெயராக அமைந்து விட்டது.

நாமும், சத்ருக்னனைப் போலவும், திருக்கச்சி நம்பிகளைப் போலவும் பாகவதத் தொண்டு புரிந்து எம்பெருமான் திருவேங்கட முடையானின் திருவுள்ளத்தினை உகக்கச் செய்து இகபரசுகம் பெற்று இன்புறுவோமாக!



# நவராத்ரி

நவராத்ரி புரட்டாசி மாதத்தில் வரும் பிரதமையில் தொடங்கி தசமி வரை மிகவும் கோலாகலமாகக் கொண்டாடப்படுகிறது. அந்த ஒன்பது நாட்களில் பார்வதி தேவி நவ வித அலங்காரங்களுடன் ஆலயங்களில் கொலுவீற்றிருப்பதைக் காண கண்கள் இரண்டு போதாது. இந்த ஒன்பது நாட்கள் சில இல்லங்களில் பொம்மைகளை வரிசையாக அடுக்கி பொம்மைகள் கொலு வைப்பது ஓர் பாரம்பரிய நிகழ்வாகும். இந்த நாட்களில் கன்னிகா பெண் குழந்தைகளை சிறந்த முறையில் அலங்காரங்கள் செய்து அவர்கள் வடிவில் பால திரிபுர சுந்தரியை பூஜித்து மகிழ்வர். சுமங்கலிப் பெண்களை தனது இல்லத்திற்கு அழைத்து தாம்பூலம் கொடுப்பதும் வழக்கம். நவமியன்று ஆயுதபூஜை செய்வது ஓர் வழக்கம். அலுவலகத்திலும், வீட்டிலும் தமக்கு உதவிய கருவிகளுக்கும், வாகனங்களுக்கும் பூஜை செய்து அதற்கு நன்றி தெரிவிக்கும் நாளாகும் இது. இந்த ஒன்பது நாட்கள் கடந்த பின் விஜயதசமி பண்டிகை கொண்டாடிட நவராத்ரி விழா இனிதே முடிவடையும். விஜயதசமி அன்று குழந்தைகளுக்கு புதியதாக கல்வி மற்றும் கலைகளை துவக்கி வைக்கும் நன்னாளாக கருதப்படுகிறது.



ஆண்டுதோறும் திருமலையில் திருமலையப்ப ஸ்வாமிக்கு நவராத்ரியில் பிரம்மோத்ஸவம் சாஸ்திர முறைப்படி நடைபெறும். ஒன்பது நாளும் பலவிதமான வாகனங்களில் காலை, மாலை வேளைகளில் திருமாட வீதிகளில் உபயநாச்சிமார்களுடனும், தனித்தும் திருவீதி உலா வருவது காண கண் கோடி வேண்டும். இறுதி நாளான திருவோண நாளில் சக்கர ஸ்நானத்துடன் இனிதே பிரம்மோத்ஸவம் நிறைவடையும். உலகை ஆட்டிப்படைத்த மகிசாசூரனை அழிக்க துர்க்கையாக அவதரித்த சக்தியின் வெற்றி திருவிழாவாக விஜயதசமி கொண்டாடப்படுகிறது. இராமாயணத்தில் ஸ்ரீராமர் இராவணனைக் கொன்ற நாளாகவும் கொண்டாடப்படுகிறது.

மகாபாரதத்தில் ஆட்சி, அதிகாரம் என அனைத்தையும் இழந்த பாண்டவர்கள் 12 ஆண்டுகள் வனவாசம், ஓராண்டு மறைவு வாசம் முடிந்தபின்னர் தமது ஆயுதங்களை திரும்பப் பெற்ற தினமாகவும் கொண்டாடப்படுகிறது.





# அக்டோபர் 2022
# ராசிப் பலன்கள்



- டாக்டர் எம்.வி. நரநாராயணன், சேலம், 94422 86213.

**மேஷம்**

பூமி லாபம் உண்டு. தொழில் துறையில் அலைச்சலும் வளர்ச்சியும் உண்டு. குடும்பத்தில் சுபச் செலவுகள் உண்டாகும். மனைவியின் ஆரோக்யத்தில் அக்கறை தேவை. தாராள பணவருவாய் உண்டாகும். குழந்தைகளுக்கு முன்னேற்றம் உண்டு. மின்னனு, மின்சாரம் சார்ந்த பொருட்களை வாங்கும் யோகம் உண்டு. சகோதர வகையில் தனலாபம் உண்டு.

**ரிஷபம்**

கணவன்–மனைவிக்குள் இருந்த பிரச்சனைகள் தீரும். தந்தையின் ஆரோக்யத்தில் அக்கறை தேவை. தந்தையுடன் வாக்குவாதம் உண்டாகும். குழந்தை பாக்கியம் இல்லாதவர்களுக்குக் கரு உருவாகும் வாய்ப்பு உண்டு. மாணவர்களுக்கு நல்ல முன்னேற்றம் உண்டு. போட்டிகளில் வெற்றி கிடைக்கும். குழந்தைகளால் தனலாபம் உண்டு. தொழில் வளர்ச்சிக்காக தூக்கத்தைத் தொலைப்பீர்கள்.

**மிதுனம்**

ஆரோக்யத்தில் மிகுந்த அக்கறை தேவை. தொழில் துறையில் இடமாற்றம் ஏற்பட வாய்பு உண்டு. தொழில் துறையில் அலைச்சலும் வளர்ச்சியும் கூடவே இருக்கும். உத்தியோகஸ்தர்களுக்கு விரைவில் பதவி உயர்வு கிடைக்கும். குழந்தைகளின் ஆரோக்யத்தில் மிகுந்த அக்கறை தேவை. மாணவர்கள் கடுமையாக உழைத்தல் வேண்டும். சகோதர வழியில் செலவினங்கள் அதிகமாகும்.

**கடகம்**

தெய்வ தலங்களுக்கு யாத்திரை செய்து நல்ல தரிசனம் கிடைக்கப்பெறுவீர்கள். தந்தை மூலம் தன லாபம் பெறுவீர்கள். குடும்பத்தில் பெரியவர்களுடைய ஆசிர்வாதம் கிடைக்கும். கணவன்–மனைவிக்குள் கருத்து வேற்றுமைகள் உருவாகும். சகோதரர்களால் தன லாபம் உண்டு. வேலை வாய்ப்பு கிடைக்கும். சிலருக்கு வெளி நாடு செல்லும் யோகம் உண்டாகும்.

**சிம்மம்**

தொழில் துறையில் புதிய முயற்சிகளுக்கு வெற்றி கிடைக்கும். பழைய பாக்கியும் வசூலாகும். வயிற்றில் இருந்த கோளாறுகள் சரியாகும். தாயின் ஆரோக்யம் நன்றாக இருக்கும். தந்தையின் ஆரோக்யத்தில் அக்கறை தேவை. மூத்த சகோதரனுக்கு நல்ல முன்னேற்றம் உண்டு. தொழில் போட்டிகளில் வெற்றி கிடைக்கும். குழந்தைகள் படிப்பு விஷயமாகச் செலவுகள் அதிகரிக்கும்.

**கன்னி**

தொழில் துறையில் புதிய முயற்சிகள் செய்யலாம். எல்லா காரியங்களிலும் மனைவி உங்கள் முயற்சிக்கு நல்ல உறுதுணையாக இருப்பார். குழந்தைகள் மற்றும் தந்தையின் ஆரோக்யத்தில் மிகுந்த அக்கறை தேவை. பிறருடன் பேசும்போது மிகுந்த எச்சரிக்கை தேவை. தேவையற்ற விவாதங்கள் செய்யக் கூடாது. தெய்வ தலங்களுக்கு யாத்திரைகள் செய்து நல்ல பலன்களைப் பெறுவீர்கள்.

**துலாம்**

மனைவியின் ஆரோக்யம் சீராகும். செலவினங்கள் அதிகமானாலும் வருமானமும் கிடைக்கும். நண்பர்கள்–உறவினர்களால் பிரச்சனைகள் ஏற்பட்டு சரியாகும். தாயின் ஆரோக்யத்தில் அக்கறை தேவை. தொழில் துறையில் வளர்ச்சியும் அலைச்சலும் இருக்கும். பணம் வசூலில் சிக்கல் உண்டு. கடன் வாங்குவதையம், கொடுப்பதையும் முடிந்த வரை தவிர்க்கவும்.

**விருச்சிகம்**

செப்டம்பர் மாதம் 16ஆம் தேதிக்குப் பிறகு தொழில் துறையில் அலைச்சல் ஏற்படும். இளைய சகோதரனின் ஆரோக்யம் பாதிக்கும். தொழில் துறையில் நல்ல லாபமும் உண்டு. பழைய பாக்கிகள் வசூலாகும். குழந்தைகளின் ஆரோக்யம் நன்றாக இருக்கும். தாய்–தந்தையரின் ஆதரவும், மனைவி மூலம் தனவரவும் உண்டு. மாணவர்கள் நல்ல மதிப்பெண்கள் பெறுவர்.

**தனசு**

ஆரோக்யத்தில் இருந்த குறைபாடுகள் நீங்கும். தொழில் துறையில் விருத்தி, நண்பர்கள், உறவினர்கள் மூலம் உதவிகள் கிடைக்கும். பணப்புழக்கம் நன்றாக இருக்கும். மனைவியால் தனலாபம் உண்டு. மாணவர்கள் நல்ல முன்னேற்றம் பெறுவர். பூர்வ புண்ணிய சொத்துக்களைப் பற்றி இம்மாதம் பேச வேண்டாம். குழந்தைகளின் ஆரோக்கியத்தில் அக்கறை தேவை.

**மகரம்**

காரியங்களில், தொழில் துறையில் வெற்றி கிடைக்கும். நல்ல லாபத்தைப் பெறுவீர்கள். குழந்தைகள் ஆரோக்யம் நன்றாக இருக்கும். இளைய–மூத்த சகோதரர்களால் நன்மையுண்டு. வீடு–மனை வாங்க முயற்சி செய்தால் வெற்றி கிடைக்கும். தொழில் துறையில் அலைச்சல் இருந்தாலும் வளர்ச்சியும் கூடவே இருக்கும்.

**கும்பம்**

குடும்பத்தில் செலவினங்கள் அதிகமாகும். அதற்கான வருமானத்தைப் பெறுவீர்கள். தீர்த்த யாத்திரையில் நல்ல தரிசனம் கிடைக்கும். மனைவியின் ஆரோக்யத்தில் அக்கறை தேவை. தொழில் துறையில் கஷ்டப்பட்டு தூக்கம் குறையும். சிந்தனைகள் அதிகமாகும். நண்பர்கள், உறவினர்கள் மூலம் உதவிகள் பெறுவீர்கள். சிலருக்கு வெளிநாடு செல்லும் யோகம் உண்டு.

**மீனம்**

இம்மாதம் ஆரம்பத்தில் நினைத்ததைச் சாதிப்பீர். 17ஆம் தேதிக்குப் பிறகு அக்கறை தேவை. தொழில் துறையில் தனலாபம் விவாதங்களைத் தவிர்க்கலாம். தெய்வ காரியங்களில் ஈடுபட்டு நல்ல பெயரையும் புகழையும் பெறுவீர்கள். மனைவி மூலம் நல்ல யோசனைகளைப் பெறுவீர்கள். குழந்தைகளின் ஆரோக்யம் நன்றாக இருக்கும். தெய்வ அருள் கிடைக்கப்பெறுவீர்கள்.

திரு. எம். அசோக்ராஜா, திருச்சி, 9750333265

ஒருவருக்கு தேதி குறித்து விட்டால், அந்த தேதியில் உயிரை எமதர்மன் எடுத்து விடுவார் என்று சொல்வார்கள். அப்படி ஒரு சிற்பிக்கு தேதி குறித்து விட்டார் எமதர்மன். அந்த தேதி பற்றி சிற்பிக்கும் எப்படியோ தெரிய வந்து விட்டது. சிற்பிக்கு இறக்க விருப்பமில்லை. எமன் ஒரு முறைதான் பாசக் கயிற்றை வீசுவார். அதில் தவறி விட்டால், மீண்டும் வீசி உயிரைப் பறிக்கும் அதிகாரம் எமனுக்கு இல்லை என்பதும் சிற்பிக்கு தெரியும். அதனைப் பயன்படுத்திக் கொள்ள ஒரு யுத்தி செய்தார்.


தன் திறமை எல்லாம் காட்டி தன்னைப் போலவே அச்சு அசலாக இரண்டு சிலைகள் செய்தார். எமன் வரும் நேரம் அவற்றை தரையில் சாய்த்து படுக்க வைத்து விட்டு, நடுவில் தானும் கண்ணை மூடிக் கொண்டு படுத்து விட்டார்.

எமன் வந்தார். பார்த்தார். திகைத்துப் போனார். மூன்றும் சிலைகளா? இல்லை இரண்டு தான் சிலைகள் என்பதை யூகித்து விட்டார். ஆனால் எவை சிலைகள், எது சிற்பி என்பதைத்தான் அவரால் கண்டுபிடிக்க முடியவில்லை. அவ்வளவுநேர்த்தி. தவறாக சிலையின் மீது கயிற்றை வீசி விடக்கூடாதே. நேரம் வேறு ஓடிக் கொண்டிருந்தது. யோசித்தார். ஒரு யோசனை வந்தது. சத்தமாய் வாய் விட்டுச் சொன்னார்.

அட என்ன தத்ரூபமாக இருக்கிறது! இவற்றைச் செய்த சிற்பியை என்னால் பாராட்டாமல் இருக்கவே முடியாது. என்னாலேயே எது சிலை எது மனிதன் என்று கண்டுபிடிக்க முடியவில்லையே! இப்படி சொல்லி விட்டு மூன்று சிலைகளையும் உன்னிப்பாக கவனித்தார். அவர் எதிர் பார்த்தது நடந்தது. நடுவில் படுத்திருந்த சிலையின் உதட்டில் லேசான முறுவல் தெரிந்தது. தற்பெருமை தான். வேறென்ன! சடாரென வீசினார் கயிற்றை. கெடுத்தது எது? தான் என்கிற அகந்தை.

ஆக பலருடைய பிரச்சனைகளுக்கு மன வருத்தங்கள் மற்றும் சோர்வுகளுக்கு காரணம் நான் தான் பெரியவன் என்கின்ற எண்ணம் தான். இத்தகைய எண்ணங்களை ஒழித்தோம் என்றால் நாம் தான் மிகப் பெரிய வெற்றியாளர்கள்.

# தான் என்கிற அகந்தை




## பல்சுவை பகுதி

## சித்திரம் வரைதல்

இந்த சித்திரத்திற்கு வண்ணம் தீட்டுவோமா...

பக்கத்தில் உள்ள படத்தை இந்த கட்டத்தில் வரையுங்கள்...



### பொருத்துக...

1. சத்யபாமா - அ. தேரோட்டி
2. கிருஷ்ணர் - ஆ. சத்ரஜித்
3. நரகாசுரன் - இ. கேதாரகௌரி
4. பூஜை - ஈ. தீபாவளி
5. விரதம் - உ. லக்ஷ்மி

1.ஆ, 2.அ, 3.ஈ, 4.உ, 5.இ.



### ஸ்ரீதுர்க்கை காயத்ரி


*ஓம் காத்யாயனாய வித்மஹே*
*கன்யாகுமரீச தீமஹி*
*தன்னோ துர்கிப்ரசோதயாத்*

காத்யாயனய மகரிஷிக்கு மகளாய் பிறந்தவளே என்றும் இளம் குமரியாய் விளங்குபவளே உங்களை வணங்குவதன் பயனாக என் மனதை தெளிவு படுத்தி என் அறிவை மேம்படுத்தி பல நற்பலன்களை எனக்கு அளிக்க உங்கள் பாதம் பணிகிறேன்.

### வார்த்தைகளை சரியாக அணிவகுத்து வாக்கியம் அமைக்கவும்...

ஒளியைக் நீக்கி இருளை கொடுக்கும் பண்டிகை தீபாவளி வாழ்வில் பண்டிகையே.

வாழ்வில் இருளை நீக்கி ஒளியைக் கொடுக்கும் பண்டிகையே தீபாவளி பண்டிகை.



### பாதையைக் கண்டுபிடி

தீபாவளி பண்டிகை அன்று பட்டாசுகள், வானவேடிக்கைகளை விட்டு சிறுவர் சிறுமியர் மகிழ்வார்கள்.

இந்த சிறுவன் வைத்த நெருப்பினால் வெடிக்க போகும் வெடி எது கம்டுபிடியுங்கள்.

### விடுகதை பகுதி...

1. ஒரு சாண் மரத்தில் ஒரு கோடி பூப்பூக்கும். அது என்ன?
2. ஒத்த முடிக்காரிக்கு பெரிய கொண்டை. அவள் யார்?
3. படபடா ஆசாமி. மனதிற்குள் இடம் பிடிப்பான். அது என்ன?

1.மத்தாப்பு,
2.குண்டு வெடி
3.பட்டாசு

# வினாடி வினா

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

## ஸப்தகிரி

## போட்டி எண்-3

**ஸப்தகிரி இதழினைப் படியுங்கள்! வினாடிவினாவில் பங்கு பெறுங்கள்!!**

1. வால்மீகியால் “அநக:” என்று குறிப்பிடப்படுபவர்..........
2. மலை ஒன்றுமே தொழ நம் வினை ஓயுமே எனப் பாசுரமிட்டவர்..........
3. திருவாட்டாறு திவ்ய தேச விமானத்தின் பெயர் ..........
4. திருமலைக்கான மலை வழிப்பாதைகளின் பெயர்..........
5. வராக அவதாரத்தின் போது பூமா தேவியின் மகன்..........
6. அஸூயா என்பதன் பொருள் ..........
7. ஸ்ரீராமனின் சகோதரர்களில் தொண்டரடிப்பொடி என அழைக்கப்பட்டவர் ..........
8. மந்திபாய் வட வேங்கட மாமலை என்று பாடியவர்..........
9. திருமலையில் ஸ்ரீவாரி சேவை துவங்கப்பட்ட வருடம்..........
10. தமிழகத்தில் இருந்தும் சேர நாட்டு திவ்ய தேசங்களில் உள்ள திருத்தலம்..........
11. முத்யால ஆரத்தியின்போது பாடப்படும் பாடல்..........
12. உமையம்மை வேலவனுக்கு வேல் வழங்கிய தலம்..........
13. திருமலையில் நவநீத சேவை துவங்கப்பட்ட ஆண்டு..........
14. உண்டியல் காணிக்கை எண்ணும் சேவையின் பெயர்..........
15. கேரளத்தில் நகுலன் புதுப்பித்தத் தலம்..........



### போட்டிக்கான நிபந்தனைகள்

- போட்டியில் பங்கு பெறும் சிறார்கள் 10 முதல் 15 வயதிற்குட் பட்டவராகவும், இந்துக்களாகவும், இந்திய குடிமக்களாகவும் இருத்தல் வேண்டும்.
- வினாடிவினாக்களுக்கான பதில்களை இந்த பக்கத்தில் மட்டுமே குறிப்பிட்ட கட்டத்தில் எழுதி "The Chief Editor, Sapthagiri Office, T.T.D. Press Compound, K.T. Road, Tirupati-517 507" என்ற முகவரிக்கு அனுப்பவும். நகல் எடுத்து அனுப்புவோர் கட்டாயம் சந்தா எண்ணைக் குறிப்பிடவும். ஒரு சந்தாவிற்கு ஒன்று மட்டுமே அனுப்பவும்.
- இப்போட்டியில் அனைத்து விடைகளும் சரியாக எழுதும் சிறார்கள் மூவர் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படுவர். மூன்று வெற்றியாளர்களின் பெயர்கள் அடுத்த மாத ஸப்தகிரி இதழில் வெளியிடப்படும்.
- இப்போட்டியை குறித்து எவ்வித தகவல்களும் தொலைபேசி வாயிலாக தெரிவிக்கப்படமாட்டாது.
- தி.தி.தே. பிரதான ஆசிரியர் அலுவலக ஊழியர்களின் சிறார்கள் இப்போட்டியில் கலந்து கொள்ள அனுமதி இல்லை.
- போட்டியில் பங்குபெறுவோர் சந்தாதாரராக இருத்தல் வேண்டும். சந்தா எண், பெயர், முழு முகவரி & தொலைபேசி எண் ஆகியவற்றை சரியாக எழுதி அனுப்புதல் வேண்டும்.
- விடைகள் வந்து சேர வேண்டிய கடைசி தேதி 25.10.2022.

| |
|---|
| ஸப்தகிரி சந்தா எண் |
| போட்டியாளர் பெயர் |
| ஸப்தகிரி சந்தாதரருடன் போட்டியாளரின் உறவுமுறை |
| போட்டியாளரின் வயது |
| போட்டியாளர் முழு முகவரி |
| தொலைபேசி எண் |

**விடையை எழுதுங்கள். திருவேங்கடவன் அருளைப் பெற்றிடுங்கள்**

## இதில் பொருந்தாதது ஏது?



குறிப்பு : தீபாவளி, விஜயதசமி, நவராத்ரி, நவ துர்கைக்கு தொடர்பு இல்லாதவற்றை கட்டத்தில் எழுதவும்.



இரண்டு சித்திரங்களுக்கு இடையே உள்ள ஏழு வித்தியாசங்களை கண்டு பிடியுங்கள்



1) வெளிர் நீலநிற மேகம்
2) வலது புறத்தில்ஆலய தூண்
3) மத்தியில் இட்ட கோலம்
4) அடர்ந்த நீலநிற மேகம்
5) 2 சிறிய தென்னைமரங்கள்
6) பறவை
7) வானவெடிகள்

# விஜயதசமியில் விஜயன்

சித்திரக் கதை


கதை மூலம் :டாக்டர் கே.ரவிச்சந்திரன்

சித்திரம் :திரு. சிவாஜி






இராஜகுமாரா! போகட்டும் நான் போர் புரிந்து பசுக்களை மீட்கிறேன். நீ தேரை செலுத்து.
உத்திரா! இந்த வன்னி மரத்தின் மேல் காணப்படும் மூட்டையைக் கீழே இறக்கு. அதில் அர்ஜுனனின் காண்டீபம் உள்ளது. அது இருந்தால் மட்டுமே எதிரிகளை எதிர் கொள்ள முடியும்.
குருவே... இது சவம் போன்று உள்ளது.
இராஜகுமாரா! அவை பாண்டவர்களின் ஆயுதங்கள். அந்நியர்கள்யாரும் கண்டிறாதபடி சவம் போல் உருவாக்கி உள்ளனர். அதிலுள்ள காண்டீபத்தை எடுத்துக் கொள்.
உத்திரன் அம்மூட்டையைப் பிரித்தான். அதில் இருந்த ஆயுதங்கள் வியப்பாக பளபளத்தன. தங்கத்தைப் போன்று ஒளி வீசிய வில் ஆயுதங்களைக் கண்டு அதிர்ந்து போனான். அர்ஜுனன் உரைத்த அவன் தன் பெயருக்குப்பின் உள்ள கதையைக் கேட்டு பிரஹன்னளை அர்ஜுனன்தான் என்பதை உணர்ந்தான்.
தேவதத்ததையும், காண்டீபத்தையும் அர்ஜுனன் சூடிக் கொண்டான். இருவரும் போர்க்களத்தை நோக்கிச் சென்றனர்.
துரியோதனா! வந்திருப்பவன் நிச்சயமாக விஜயனே.
பிதாமகரே! அவன் அர்ஜுனன் எனில் பாண்டவர்களின் ஆட்டம் முடிந்தது. மீண்டும் பனிரெண்டு ஆண்டுகள் வனவாசம் தப்பாது அல்லவா!
காண்டீபன் நிஜ உருவில் நம் முன் வந்துள்ளான் எனில் சிறிது ஆலோசித்தல் வேண்டும். என் கணக்குப்படி இந்த விஜயதசமியுடன் பாண்டவர்களின் ஆரண்ய அக்ஞான வாசம் முழுமையாக முடிவுற்றது. எனவே வந்திருப்பவன் விஜயனே. அவனிடம் வெற்றி கொள்வது எளிமையானது அல்ல.
அர்ஜுனன் வீரத்துடன் போர் புரிந்து கௌரவர்களை வென்று பசுக்களை மீட்டான். இந்த விஜயதசமி நாளில் இக்கதையைக் கேட்பவர்களுக்கு நற்பலன்கள் கிடைக்கும் என்பதில் ஐயமில்லை.
முற்றும்.

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

# ஸப்தகிரி

(சமய மாத இதழ்)

## சந்தாதாரர் விண்ணப்பப்படிவம்

1. பெயர் மற்றும் முகவரி : ________________
(பெரிய எழுத்துக்களில்) ________________
________________
________________

அலைபேசி எண் ☐☐☐☐☐☐☐☐☐☐

2. தேவையான மொழி : ☐ தெலுங்கு ☐ தமிழ் ☐ கன்னடம் ☐ இந்தி ☐ ஆங்கிலம் ☐ சமஸ்க்ருதம்

3. வருட /ஆயுள் சந்தா : ☐ ரூ.240/- ☐ ரூ.2,400/- (12 வருடங்கள்)

4. சந்தா புதுப்பித்தல் :
(அ) சந்தா எண். :
(ஆ) மொழி :

5. செலுத்திய தொகை :

6. செலுத்திய வழி :
பணவிடை (எம்.ஓ./ஐ.எம்.ஓ.)
ரசிது எண் : தேதி:
வங்கி கேட்பு வரைவோலை/காசோலை
டி.டி./காசோலை எண். : தேதி:
இடம் :
நாள்: சந்தாதாரர் கையொப்பம்

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி.

## தகவல் மையம்

### தி.தி.தே. கால்சென்டர்

உங்களுக்காக

### 24 மணி நேரமும்

திருமலை திருப்பதி தேவஸ்தானம் பக்தர்களின் வசதிக்காக திருப்பதியில் தகவல் மையம் ஆரம்பித்துள்ளது. பக்தர்கள் தங்களுக்கு வேண்டிய அனைத்து விவரங்களையும் அறிய இந்த மையத்தைத் தொடர்பு கொள்ளலாம்.

ஸ்ரீவாரி ஆர்ஜித சேவை டிக்கெட், தங்கு வசதி, நன்கொடை திட்டங்கள் குறித்து அறிய..... இங்ஙனே பல்வேறு சேவைகள் குறித்து.... தேவஸ்தானத்திற்குத் தொடர்புடைய அனைத்து விவரங்களையும் நீங்கள் உங்கள் ஊரிலிருந்தே தெரிந்து கொள்ளலாம்.

*இம்மையம் 24 மணி நேரமும் பணிபுரியும் எப்பொழுது வேண்டுமானாலும் நீங்கள் தொடர்பு கொள்ளலாம்.*

தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி எண்கள் :
**0877-**
**2233333**
**2277777**

- ஸப்தகிரி வருடச் சந்தா ரூ.240/- ஆயுள்சந்தா ரூ.2,400/- (12 வருடங்கள்) காசோலை, இ.எம்.ஓ., டி.டி. -யை பிரதான ஆசிரியர், ஸப்தகிரி, தி.தி.தேவஸ்தானம், திருப்பதி எனும் பெயருக்கு எடுத்தல் வேண்டும்.
- ஸப்தகிரி சந்தாதாரராக சேர/சந்தா புதுப்பிக்க விரும்புவோர் இக்கூப்பனை பூர்த்தி செய்தோ அல்லது வெள்ளைத்தாளில் மேற்குறிப்பிட்ட விவரத்தை எழுதியோ அனுப்பலாம்.
- கீழே குறிப்பிட்டுள்ள முகவரியை மட்டுமே அணுகவும்.
- தி.தி.தேவஸ்தான ஆசிரியர் அலுவலகத்தைத் தவிர வேறு எங்கும் பணத்தை செலுத்தி ஏமாறாதீர்கள்.
- மணியார்டர் அனுப்புவோர் அதில் உங்கள் சந்தா விவரங்களை எழுதி கட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பவும்.

**எங்கள் முகவரி :**

பிரதான ஆசிரியர்,
ஸப்தகிரி அலுவலகம்,
தி.தி.தேவஸ்தான அச்சக வளாகம்,
கபிலதீர்த்தம் சாலை,
திருப்பதி – 517507.

Printed by Sri P. Ramaraju, M.A., and Published by Dr. K. Radha Ramana, M.A., M.Phil., Phd., on behalf of Tirumala Tirupati Devasthanams and Printed and Publised at Tirumala Tirupati Devasthanams Press, K.T. Road,Tirupati 517 507. Editor : Dr.V.G. Chokkalingam, M.A., Ph.D.

19–08–2022 அன்று திருப்பதி சப்த கோ பிரதக்ஷிணை மந்திரம் மற்றும் கோசாலையில் நடைபெற்ற கோகுலாஷ்டமி கொண்டாட்ட நிகழ்ச்சி. இந்நிகழ்ச்சியில் தி.தி.தே. பொறுப்பாண்மைக் குழுத் தலைவர் திரு. ஒய்.வி. சுப்பாரெட்டி அவர்கள், தி.தி.தே. ஜே.இ.ஓ திரு. வீ. வீரப்ரஹ்மம் ஐ.ஏ.எஸ். அவர்கள், ஜே.இ.ஓ (எச்.& இ.) திருமதி எஸ்.பார்கவி ஐ.ஏ.எஸ். அவர்கள், பொறுப்பாண்மைக்குழு உறுப்பினர்கள் மற்றும் உயர் அதிகாரிகள் பங்குகொண்டனர்










SAPTHAGIRI (TAMIL) SPIRITUAL ILLUSTRATED MONTHLY Published by Tirumala Tirupati Devasthanams Printing on 25-09-2022 & posting at Tirupati RMS Regd. with the Registrar of Newspapers for India under RNI No.APTAM/ 2021/80590. Postal Regd.No.TRP/157/ 2021-2023 "LICENCED TO POST WITHOUT PREPAYMENT No.PMGK/RNP/WPP-04(5)/2021-2023" Posting on 20th of Every month.

